தமிழ் வாழ்க

தமிழ்ப்பொழில்

திங்களிதழ்

துணர் : 57

மலர் : 8

கரந்தைத் தமிழ்ச் சங்கம்

தொண்டு தமிழ் முன்னேற்றம்

கரந்தைத் தமிழ்ச் சங்க வெளியீடு

திருவள்ளுவர் யாண்டு: 2014—உருத்ரோத்காரி கார்த்திகை
(1983 நவம்பர் — டிசம்பர்)

பொழிற்றொண்டர் :
ச. பாலசுந்தரம்

தமிழ்ப் பொழில்

துணர் : 57 ⋮ உள்ளுறை ⋮ மலர் : 8

1. பாரதியாரும் சக்திப்பாக்களும் 337
K. சோமசுந்தரம், B.A., B.L., தஞ்சை.

2. சிறு பிழையும் பெரு விளக்கமும் 346
ந.ரா. முருகவேள், M.A. M.O.L.,
ஆசிரியர், "திருக்கோயில்" சென்னை-34.

3. சோழரின் கோயிற் கலை 353
பேராசிரியர் சி.கோ. தெய்வ நாயகம்,
கரந்தைப் புலவர் கல்லூரி.

4. வாழ்க்கையின் குறிக்கோள்கள் 363
அ.ர. சேஷாசலம், முன்னாள் முதல்வர்.
சேதுபதி அரசினர் கலைக் கல்லூரி,
இராமநாதபுரம்.

5. இராஜேந்திர சோழனின் சோழ கங்கம் 378
இராஜ் பவுன்துரை
தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சை.

6 வண்ணகமும் அராகமும் ஒன்றா 383
புலவர். இரா. இராமமூர்த்தி, எம் ஏ., எம்.எட்.,
ஔவையார் மகளிர் கல்லூரி, காரைக்கால்.

தமிழ் வாழ்க

தமிழ்ப் பொழில்

கரந்தைத் தமிழ்ச்சங்கத் திங்கள் வெளியீடு

துணர் : 57 — திருவள்ளுவர் யாண்டு — 2014 — உருத்ரோத்காரி — கார்த்திகை — 1983 நவம்பர் — டிசம்பர் — மலர் : 8

பாரதியாரும் சக்திப்பாக்களும்.

K. சோமசுந்தரம், B. A., B. L.,
தஞ்சை.

பாரதியார், பராசக்தியை மனக்கண்ணால் கண்டு, புரையற்ற சக்தித் திருவருளைப் பற்றுக்கோடாகக் கொண்டு முக்தி தரும் பாக்களை சக்தித் தமிழில் மனவலியால் இசைப் பாராயினார். இரு வினையொழித்துப் பிறப்பறுத்துச் சார்தற்கிடனாய் சக்தி இறை நிலையே முக்தியாகும் என்பது அவரது முடிந்த முடிபு. பாரதியார், பராசக்தியினைப் பற்றிப் பலவாறு எடுத்துத் துதிப்பினும், துணியப் படாத சக்தியின் இயல்பு, தன் துதியில் அடங்காதென உணர்ந்தார். பராசக்தி உருவும் அருவுமாகவும், அல்லாதாகவும்) நின்று உலகத்துப் பொருள்களோடும் உயிர்களோடும் உறவாய் மன்னி, மலரும் மணமும் போன்றும், மறையாகியும் மறை பொருளாகியும் கலந்து நிற்கும் இயல்பினை மனத்தால் கருதவும் அறிவதும் அரிதென

விதிர்த்தார். அதனுல் சூழலும் இயல்புடைய அவரது சிந்தைக்கு ஆதரவாகப் பராசக்தி களிப்புங் காட்டி அவரது அவலத்தைக் கெடுத்து, கடைக்கண் பார்வையால் பொழியும் அருளினை, பாரதியாருக்கு உய்யும்படி உவகையுடன் அளித்தாள். பராசக்தியினை நினைதொறும் உள்ளம் நெகிழவே, பராசக்தி தன்னைக் காட்ட, அதனை உணர்வுடன் வழிபட்டுக் கண்ட பாரதியார், அவளது அருளால், அவளை விட்டு நீங்காத ஞானச் செல்வராய்த் திகழ்ந்தார். திகழவே, பாமாலையால் துதிக்க விரும்பிய பாரதியாருக்குப் பாடும் வன்மையை பராசக்தி தந்தருள அவர் சக்தியின் கோட்பாடுகளையும், கொள்கைகளையும் அறிவியல் கருத்துக்களுக்கு மிகப் பொருத்தமாகவும், ஆன்மீகத் துறையின் அடிப்படையில் சக்திப் புகழ் பாடல்களை பக்திப் பெருக்குடன் இசையுமாறு விஞ்ஞானம் காட்டும் மெய்ஞ்ஞான உண்மைகளை அப்பாக்களில் அமைத்துள்ளார். இதனுல் சக்தி நிறைந்த சீரிய வாழ்க்கையே பாரதியாரின் வாழ்க்கையென்பது துணியப்படும்.

பராசக்தியின் ஒளியோடு கூடிய அழகின் உண்மையினை எளிதே காண இயலாது, சக்தியின் முன் இருள் விலக, விளக்கேற்றி உலக மக்கள் தொழுதலைப் பாரதியார் கண்டு மனம் புண்பட நொந்தார். அன்னுர் தம்முள்ளத்தே ஞான விளக்காகத் தூண்டும் பரிசினையும் பரிணமத்தையும் உணர்ந்தாரில்லையென பாரதியார் தேர்ந்தார். அவர் சக்தி வழிபாட்டின் திறனை சமயத்துறைக்குரிய விசித்திரத் தெளிவுடன், இலக்கியக்கலை அறிவோடு மேம்படும் இறையுணர்வால் உணர்த்த முற்பட்டார். திருவிளக்காகக் காட்சி வழங்கும் பராசக்தியை அழகுணர்வுடன் தெளிவாகக் கண்டு தொழ வேண்டுமென்பது பாரதியாரது உள்ளம். இதனைப் பாரதியார் பின்வருமாறு பகர்வர்.

'ஞாலமுற்றும் பராசக்தி தோற்றம்
ஞானம் என்ற விளக்கினையேற்றிக்
காலமுற்றும் தொழுதிடல் வேண்டும்
காதல என்பதோர் கோயிலின் கண்ணே'.

பராசக்தி உலகத்து நாயகியாதலால், அவளது வணக்கம் உலகினைத் தழுவியதாகவும் உலகுயிர்களின் நலனுக்காகவும் அமைதல் வேண்டுமென்பதே பாரதியாரின் முக்கிய குறிக்கோள்.

'எங்கும் தெய்வம், எதுவும் தெய்வம்
எங்கெங்கும் காணினும் சக்தியடா!
ஏழுகடல் அவள் வண்ணமடா!

என்பர் பாரதியார். இதனைத் தத்துவஞானி தாயுமானாரது

'அங்கமே நின்வடிவமான சுகர் கூப்பிட நீ
எங்கும் ஏன்? ஏன்? என்றதென்ன! பராபரமும்'

என்றக் கண்ணிப் பாட்டில், மனதை பறிகொடுத்த பாரதியார், தன் மனம் மலர, இறைஉலகப்பொருள்கள் யாவற்றிலும் ஞானமயமாய், நிரம்பிக் கிடப்பதை, அறிவின் தெளிவாலும், அன்பின் உணர்வாலும் தெரிந்து அனுபவ வாயிலாகக் கண்டுகொண்டாரென்பது புலனாகும்.

இயக்கம் பல நிறைந்துள்ள இந்நிலவுலகில் அதனை இயங்கச் செய்யும் திறம் ஒன்று இருத்தல் இயல்பு. அத்தகைய ஒன்றுதான், வழிபாட்டிற்குரிய ஆற்றல் கொண்டு விளங்கும் சக்தியாகும். இச்சக்தியோடு இணைந்துள்ள சிவமே பிரம்மம் என்று தத்துவபூர்வமாக பாரதியார் தெள்ளத் தெளிந்து அச்சக்தியினை, இச்சகத்தில் கண்டு, நலம் பெறும் வகையில் போற்றுதல் வேண்டும் எனக் கண்டார். பிரம்மம் எளிதில் சொல்லத்தகுந்த பொருளன்று என்றும், அஃது நாமமும் உருவமும் அற்று, மனம் நாடரிதாய், புத்தி தேடரியதாய் உளது என்பதும் பாரதியாரின் உறுதிப்பாடு. அவர், சக்தியின் உண்மையைப் பற்றி உணருங்கால், இவ்வையகம் மாயையாக இருக்க இயலாதென்பதை முதற்கண், வலியுறுத்தி, முக்காலத்திலும் உளதாகிய உலகத்துச் செயல்கள் யாவும் சக்தியின் பாலதென்றும், சக்தியின் அடிப்படையான மேம்பாட்டுத் தத்துவத்தையும் விளக்க, தம்பாக்களிலே முயன்றுள்ளார். ஞான வடிவுடன் அருளொடு கூடிய சிவமும் சக்தியும் ஒன்றென்றும், அவ்வொன்றில் இரண்டாகவும் இரண்டில் ஒன்றாகவும் அவை விளங்குவதையும், மலை மகளாகிய கொற்றவை வழிபாடு, சிவ வழிபாடாகவும், சக்தி வழிபாடாகவும் விளங்குவதையும், எல்லையற்ற இவ்வுலகினை, ஆக்கல், காத்தல், அழித்தல் என்ற மூவகைத் தொழிலாலும் நடத்தி இயங்கச் செய்வது பராசக்தியென்பதையும், அவரது சக்திப்பாக்கள் தெளிவுபடுத்தும்.

இச்சக்தி, மூவகையாக. இச்சாசக்தி, (விரும்புதல்) ஞானசக்தி (அறிதல்) கிரியாசக்தி (செயல்படுத்தல்) எனப் பிரிந்து உலகப் படைப்புக்குக் காரணமாகயிருந்தும், அதனைக் கட்டுப்படுத்தும் வகையில் தாங்கியிருந்தும், வாழுமுயிர்கள், இறையியல்பையுணர்ந்து பண்பாட்டுடன் விளங்கச் செயல்புரிந்தும் பெருந்துணையாகத் திகழும், சிவத்தில் உள்ள சக்தி சிலசமயம் சிவமாகவும் விளங்கத் தோன்றுமென்பதையும் அதன் அம்சங்களையும் திறங்களையும் நிறங்களையும் பகுத்தறிவுக்குப் பொருத்தமுற, தன்

கவிதைகளில் பாரதியார் எடுத்துக்காட்டியுள்ளார். மற்றும் அவர் பிறிதோரிடத்தே, சுத்த அறிவே சிவம் எனவும், ஒரே சக்தி தொழில் வேறுபாட்டால் பல்வேறு வகைப்படும் எனவும் குறிப்பிடுவது கவனிக்கத்தக்கது. சக்தித் தெய்வப்பாடல்களில், தேசபக்தியும், சமூக முன்னேற்றமும் காணுமாறு நாம் வாழும் பாரத நாட்டையே சுதந்திர தேவியாகக் கொண்டு, பாரதியார் அதனைப் பராசக்தியென புத்துணர்வுடன் கருதுதல் வேண்டுமெனக் கோருகிறார். பாரதியாருக்கு பாரதநாடு பாரதமாது: பராசக்தி உலகின் அன்னை என்பதாகும்.

'அன்னை வடிவமடா — இவள்
ஆதிபராசக்தி தேவியடா — இவள்
இன்னருள் வேண்டுமடா — பின்னர்
யாவுமுலகில் வசப்பட்டு போமடா!
செல்வங்கள் பொங்கி வரும் — நல்ல
தெள்ளறி வெய்தி நலம் பல சார்ந்திடும்.'

பாரதியார் சக்திக் காளியின் இறைமைக் குணத்தை அறிவுறுத்தும் வகையில், காதல்பக்தி வெள்ளம் பரந்து பாயப்பாடித் துதிப்பாராயினார். உலகை ஈன்ற சக்தி அன்னை, உலகப் பொருள்களிலும் உள் நிலையாக இயங்கி யிருக்கும் தன்மையினையும் உன்னினார். இதனை பாரதியார்,

''யாரும் பணிந்திடும் தெய்வம் — பொருள்
யாவினும் நின்றிடும் தெய் வம்"

எனத் தெளிவாக்கியுள்ளார். இதனைப்பற்றி இசையுணர்வோடு பாரதியார், யாவரையும் பரவசப்படுத்தும் பான்மையொடு பாடும் போது, அவரின் இறையுணர்வும், தெளிவும், உறுதியும், அன்பின் திறனும், நாட்டமும் உணரப்படும். 'சங்கீத ரசிகே' என சக்தி யன்னையை விளித்து, தனக்கு இசையறிவை வளர்த்தபராசக்திக்கே, பாரதியார் இசைநயம் பொருந்தவாடாத பாமாலைகளை நன்றி யறிவோடு சூட்டியுள்ளார்.

அன்னை வடிவில் பரம்பொருளை நாடி நுண்ணறிவால் அளவற்ற ஞானமுடைய பாரதியார், தன் வாழ்க்கையினை சக்திக்குப் படைப்பொருளாக சமர்ப்பணம் செய்து, சக்திப் பணிகள் வழி, பராசக்தி யுணர்வை வளர்த்துக் கொண்டே அறிவு தருக்க முறைப் படி ஆன்மீக முன்னேற்றம் பெற்றார்.

'சக்தித் தொழிலே யனைத்துமெனிற்
சார்ந்த நமக்கு சஞ்சலமேன்'

என்கிறார். சக்தியினை வணங்கி வாழ்த்திச் சரண்புகுந்தால் இம்மைக்குரிய செல்வமும் சிறப்பும் அதிக வரமும் பெறலாம் ; மனக் கவலை தீரும் ; அறிவும் ஞானமும் நிறைவுறும் ; அறிவுணர்ச்சிக் குரிய கல்வி மல்கும் ; மறுமைக்குரிய முக்தியும் கைகூடும் ; ஞானத்தோடு கூடிய பக்திச் சிறப்பும் உண்டாகும் ; வீரமும் தீரமும் திகழும் ; ஆக்கமும் ஊக்கமும் பெருகும் ; உயர்நோக்கும் போக்கும் உள்ளத்தில் அமையும் எனப் பாரதியார் உறுதிப் பாட்டுடன் வலியுத்றுதுவர். காளிமகா சக்தி பால் எழும் பக்தியினாலே, சிறுமைகள் நீங்க,

... ... சித்தம் தெளியும்
செய்கை அனைத்திலும் செம்மை பிறந்திடும்
வித்தைகள் சேரும், நல்ல வீரர் உறவு கிடைக்கும்
மனத்திடை தத்துவம் உண்டாம்
நெஞ்சில் சஞ்சலம் நீங்கி உறுதி விளங்கிடும்
கல்வி வளரும் பல் காரியம் கையுறும்

எனப் பாரதியார் பகுத்தறிந்து கூறி, புதியதோர் சமுதாய வளர்ச்சித் தத்துவம் செயல் திறனாலே மேம்படுவதை உணர்த்தி விடுகிறார்.

பாரதியார் பராசக்தியின் அம்சமாகிய திருமகளைப் பணிந்து, தாம் வல்லமைபெற்றுச் செல்வமெய்தி, செம்மையுடன் மகிழ்வுற்று வாழ மனவுறுதி கொண்டு வேண்டுவர். தனக்கு கவிதையாற்றும் திறன் கலைமகளாகிய பராசக்தியின் அருளின் விளைவு எனத் திண்ணமுற எண்ணி,

'செய்யும் கவிதை பராசக்தி யாலே
செயப்படும் காண்'

எனமனமொழி மெய் ஆகியவைகள் அடங்கச் செப்புவர். பாரதியார் சக்திப்பாடல்களை, தன் கல்வியறிவு வன்மையால் பல்வகையாக, பல்வேறு சூழ்நிலையில் பல்வழியாய தூண்டுதல் காரணமாக, பல தலைப்பெயர்களுடன், பல்வேறு கோணங்களில், பராசக்தியின் அருட்பார்வையால், சிறப்பித்துப் புகழ் மணக்கப் பாடியுள்ளார். அவைகளில் பெரும்பாலும் அறிவியலின் கருத்துக்கு இணங்கும் வேதாந்தத்தில் ஊறிய பக்தி உணர்வினையும், ஆன்ம உணர் வினையும் ஊட்டும் சிறப்பியல்கள் பலவுள. அவை ஒளிச்சிறப்பும் பொருட்செல்வமும் கற்பனை விந்தையும் மலிந்தவை. மகா சக்தியை சந்திரன் ஒளியில், பாரதியார் கண்டு சரணமெனப்புகுந்து கொண்டதால், வாழும் தன்னெஞ்சிற்கு, அச்சக்தி களிப்பினை ஊட்டினாள் என்பர். அதனால் தான் இந்திரியங்களை வென்று

விட்டதாகவும், ஆசைகளைக் கொன்றுவிட்டதாகவும் பெருமைப் படுவார். சக்தி 'அன்னை, தன் துன்பத்தைக் கொய்து துயரில்லாதவாறு செய்து, பயன் எண்ணாமல் உழைக்கவும், தீராத பக்தி செய்து, மாறாத அன்பு செலுத்தி ஆனந்தமாக வாழவும் வகை செய்தாளென நெஞ்சாரப் புகழ்வார்.

மற்றும், பாரதியார், அனைத்துப் பொருள்களிலும் மேவி இயங்கும் அருட்பெருஞ்சக்தியை, தன் பந்தங்களைப் போக்கி, சிந்தைகளைத் தெளிவாக்கி யோகத்தில் நிலைநிற்க அருள் புரியுமாறு உளமார வேண்டித்துதிப்பார். மேலும் அவர், பராசக்தி! நீயேயாதுமாகி நின்று எங்கும் நீ செம்மை தோன்ற நிறைந் துள்ளாய். என் மீது அருள் புரிந்து காப்பாய்! எனக்கு நன்றினை நாடும் திடமனமும், இன்பம் உறைந்து நிற்கும் மனவிருத்தியும் ஈதல் வேண்டும். நானே நீ, நீயே நான் என உணர்ச்சியோடு தன்னுள்ளத்தில் தோன்றியதை விருப்பத்துடன் எடுத்து இயம்புவார். மற்றும் அவர் பராசக்தியை உலகத்தின் ஆன்மா எனக் கொண்டு, சிந்தனை தெளிந்தேன். இனியுன்றன் திருவருட் கெனை அர்ப்பணம் செய்தேன்' என பராசக்திக்கு சமர்ப்பணம் செய்து, தமது புகழ் திக்கெல்லாம் பரவத் தன்னைக் காப்பாற்றும்படி வாழ்த்திப் போற்றுவர். என்னை சாதாரணமாக, வேடிக்கை மனிதரைப்போல நினைத்தாயோ? ஓயாது பயனுறும் கவிதை எழுதி நினக்கு சமர்ப்பிக்க, வற்ருத கவிதை யூற்று என்னுளத்தில் அமையு மாறு திருவருள் புரிவாய்' என்றும், 'எதையும் வேண்டில தன்னை பராசக்தி, இன்பமொன்றினைப் பாடுதல் அன்றியே, என் உள்ளத் துள்ளே உறைவிடங்கொண்டு மெய்யுணர்வினை ஊக்கி அளிப்பாய்,' எனவும் உள்ளம் நெகிழ உணர்த்துவார். மற்றும் பராசக்தியின் மலர்த்தாளில் விழுந்து அபயமும் வரமும் கேட்பார். நாட்டு மக்கள் நலமுறவாழ அன்னை பராசக்தி ஏழையேன் கவிதையாவும் தனக் கெனக் கேட்கிருள்' எனகவிதை யோகத்தில் கைவந்த பாரதியார் கூறுவது ஈண்டு சற்றே கவனிக்கற்பாலது.

உள்ளத்தே பராசக்தியின் அருமை பெருமையினை உணர்ந்து அவளது ஒளியினை தனக்குள்ளே உண்டாக்கிக் கொளின், வாக்கினிலே ஒளி எளிதே உண்டாகுமென்பதும், அவ்வருள் வாக்கின் ஒளிவழி சொல்லின்பம், மந்திர அமுதம் போன்றும், ஆகமச்சுட ராகவும் விளங்கி அமையவேண்டுமென்பதும் பாரதியாரின் உள்ளம் சக்தியென்பது இன்பமாய அமைதியின் நிலையினையும் முக்தியின் முடிபினையும் உணர்த்து மென்பது அவரது கருத்து. தெய்வ வாழ்க்கையுற்று மக்கள் வாழ்ந்திட, மக்கள் தம் சிறுமையும் இறை உயர்வையும் உணர்ந்து அறிவுச் சக்தியை இடைவிடாது சிந்தித்து அடக்கத்து ஆற்றலுடன்

'ஓம் சக்தி, ஓம்சக்தி, ஓம்சக்தி
ஓம் சக்தி யென்றுரை செய்திடுவோம்'

எனப் போற்றி வழிபடல் வேண்டு மென்பர், பாரதியார். மற்றும், அவர் வேதநெறி உண்மைகளையும் விஞ்ஞானம்புகட்டும் உண்மை களையும் பகுத்தறிவுக்கும் பொருத்தமாக சக்திவழிபாட்டினிலே அமைத்தார், சக்தி வழிபாட்டில் உயிரினின்றும் சக்தியை வேறு படுத்தாது அத்னோடு ஒன்றி நின்று வழிபடல் வேண்டும் என்று பாரதியார் வற்புறுத்துவாராயினார். இத்தகைய அத்துவித வழி பாடே பிறவா நெறியை அளிக்கவல்ல பேறுடையதாகும் என அவர் கூறுவர். கூர்ந்து சிந்திக்கின், காயத்திரி மந்திரமே,

—செங்கதிர்த் தேவன் சிறந்தயொளியினைத்
தேர்கின்ரேம் — அவன்
எங்களறி வினைத் தூண்டி நடத்துக'—

சக்தி வழிபாட்டிற்கு இன்றியமையாத தொன்று. இஃது சக்தியின் அருளால், அறியாமை இருளினையும், மனக்குற்றத்தையும், மலப் பிழையையும் போக்கி வெற்றியுணர்வையும் ஞானத் தெளிவையும் நல்கும்பான்மைத்து, பாரதியாரது கருத்துப்படி

'ஓம் சக்தி யென்பவர் உண்மை கண்டார், சுடர்
ஒண்மை கொண்டார் உயிர் வண்மை கண்டார்'

'ஓம் சக்தி' எனப் பலமுறை கூறித் துதித்தால், பயனுற வாழ உடலில் சக்தி சேரும்: (நல்லதை தந்திடுவாள் பராசக்தி') சுகந் தரும் ('சக்தியென்று சொன்ஞல்—அதுவே சுகம்') இன்பம் பெருகும்: துன்பம் தீரும்:கல்வி தேறும்:செல்வம் ஊறும்: ஒளியும் அறிவாற்ற லும் ஒன்றுகூடி முதிரும், பேரொளிப் பிழம்பாகிய பராசக்தி அருளு கின்ற ஒளியினைக் கொண்டு, ஞாயிறும், திங்களும், முறையே ஞான விளக்கத்தையும் திருவருட்பேற்றையும் பெற்று ஒளிர்கின்றன என்று பாரதியார் பகர்வார்,

'ஓம் சக்தி' யென்பது பாரதியாரது தாரகமந்திரம். இந்த மந்திரசக்தி, இவரது பராசக்திக் கவிதைகளில் பக்தியோடு உறவாடி, சக்தி அறிவென்றும் தெய்வ உண்மையில் ஒன்றிவிடுகிறது- சக்தி நினைவில், வளரும் நெறியும் உண்டென பாரதியார் புலப்படுத்தி, சக்திச் செல்வங்களையும் அவற்றின் விளைவுகளையும், நம் நெஞ்சகத்தே வலிமையோடு நிலையாய் நிற்கும்படி எடுத்துக் காட்டுவர். இதனான் இவரது கவிதைகளிலே, ஒளியறிவால் மெய்ப் பொருளாக விளங்கும் அன்னை பராசக்தி, ஆன்மாவாக மயங்கி நிலவி சக்திக் கவிதைகளின் பொருட் பெருமையினையும் ஒளிச் சிறப்பினையும் செவ்விதாகத் தழைக்கச் செய்யும்.

ஒளிமயமாய உலகெலாம் நிறைந்திருக்கும் பராசக்தியின் அம்சங்கள், உமை, திருமகள், கலைமகள் எனவும் (நவராத்திரி பாட்டு) அயன் அரி அரன் எனவும் (சக்தி விளக்கம்) பாரதியார்

'பத்துப் படை கொளும் பார்வதி தேவியும்
கமலத் திதழ்களிற்களிக்கும் கமலையும்
அறிவினையருளும் வாணியும் அன்னை நீ!
மூர்த்திகள் மூன்று பொருளொன்று அந்த
மூலப் பொருள் ஒலியின் குன்று;
நேர்த்தி திகழு மந்தவொளியை—எந்த
நேரமும் போற்று சக்தியென்று.

வலியுறுத்தித் தெளிவுபடுத்துவார். பாரதியார் கூறும் மூலப்பொருள் 'குன்றாவொளி யாகுமென்பது பின்வரும் அவரது வாக்கால் உணரப்படும்.

தவறுது உணர்வீர் புவியீர் மாலும்
சிவனும் வானோர் எவரும் ஒன்றே
ஒன்றே பலவாய் நின்றோர் சக்தி
ஒன்றுந் திகழும் குன்றா வொளியே

சக்திக்கு விளக்கம் தரும் வகையில் பாரதியார்,

'உள்ளத் தொளிரும் விளக்கே சக்தி
எண்ணத்தி லிருக்கும் திரியே சக்தி
சொல்லில் விளங்கும் சுடரே சக்தி

... ...

சந்திரனொளியில் அவளைக் கண்டேன்
மீன்கள் செய்யும் ஒளியைச் செய்தாள்
வீசி நிற்கும் வளியைச் செய்தாள்

எனப் பரிவுடன் உரைப்பாராயினர்.

மற்றும், பராசக்தியைப் போற்றுங்கால் பாரதியார், 'கனியிலே சுவையும், காற்றினிலே இயக்கம் கலந்தாற்போல, நீ அனைத்தும் கலந்தாய்' என்றும், 'தீம்பழம் தன்னில் சுவையே சக்தி' எனவும் கூறுவர். ஒளியும் இருளும் சக்தியெனக் கூறி, ஐம்பூதங்களும் சக்தியின் உருவென உணர்த்தும் வகையில்

'நீராகக் கனலாக வானாக் காற்றா
நிலமாக வடிவெடுத்தாள்'. எனவும்
'பூதங்களைந்திலிருந்த தெங்கும் கண்ணிற்
புலப்படும் சக்தியைப் போற்றுகின்றோம்'

என மொழிந்து, சக்தி அமுதமாகும் பெற்றியினைப் புலப்படுத்துவார்.

> *'காலையின் வெயிலின் காட்சி—அவள்*
> *கண்ணொளி காட்டுகின்ற மாட்சி*
> *நீலவிசும்பினிடையிரவிற் கடல்*
> *நேமியலைனத்து மவளாட்சி'*

எனப் பாராட்டும் வகையில் அன்புகாட்டி, பராசக்தியைக் கடல் என்றும், ஞாயிறு என்றும் கற்பித்தும் சிறப்பித்தும் அழகொழுக.

> *'வலை நோய் தீர்க்கும் மருந்தின் கடலாய்*
> *பிணியிருள் கெடுக்கும் பேரொளி ஞாயிறாய்'*

பராசக்தி நிற்றலைப் புகழ்வாராயினார். சக்தியின் ஆற்றல் எங்கணும் பரவியுள்ளது எனக் கூறும் பாரதியார், சிவனுக்கும் சக்திக்குமுள்ள தொடர்பையும் பரஞானத்தியல்பையும்

> *'ஆதியாஞ் சிவனுமவன் சோதியான சக்தியுந்தான்*
> *அங்குமிங்கு மெங்கு முளவாகும்—ஒன்றே*
> *யாகினாலுலகனைத்தும் சாரும்—அவை*
> *யன்றியோர் பொருளுமில்லை. அன்றியொன்று*
> *மில்லையிதை*
> *ஆய்ந்திடின் துயரமெல்லம் போகும்—இந்த*
> *அறிவுதான் பரமஞானமாகும்'* என எடுத்துக் கூறுவர்

மற்றும் அவரே சக்தியியங்கும் வரை உலகு இயங்குமென வேதம் சொல்லும் வழியினை இயம்புவாராயினர்.

பாரதியார் இறைமையின் இயக்கம் சக்தியென்றும், இயற்கையின் இயக்கத்தில் இணங்கும் ஐம்பூதங்களால் எழக்கூடிய பொருளின் காட்சிகள் அனைத்திலும் உள்ளே நின்று இயங்கும் சக்தியின் மாட்சியினையும் ஆட்சியினையும் திண்மையுற, தம் சக்திப் பாக்களில் விளக்கியுள்ளார். இவ்வாறு இயற்கையில் இயங்கும் சக்தியை. அவர் வாழ்வினைப் பெருக்கும் உயிர் நிலையாக வையகத்தே திகழ்ந்து வயங்குவதை

> *'வாழ்வு பெருக்கும் மதியே சக்தி*
> *மாநிலங் காக்கும் வலியே சக்தி*
> *தாழ்வு தடுக்குஞ் சதிரே சக்தி*
> *சஞ்சல நீக்கும் தவமே சக்தி*
> *வீழ்வு தடுக்கும் விறலே சக்தி*
> *விண்ணை யளக்கும் விரிவே சக்தி*
> *ஊழ்வினை நீக்கும் உயர்வே சக்தி*
> *உள்ளத்தொளிரும் விளக்கே சக்தி'*

சிறுபிழையும், பெருவிளக்கமும்

ந. ரா. முருகவேள், M.A.M.O.L.
ஆசிரியர்: "திருக்கோயில்", சென்னை-34

முன்னுரை:

தமிழ்நாட்டில் அண்மைக் காலத்தில் வாழ்ந்திருந்து மறைந்த (1944) தலைசிறந்த தமிழ்ப் பெரும் புலவர்களுள், நாவலர்—பண்டிதர் திரு. ந. மு. வேங்கடசாமி நாட்டார் அவர்கள், மிகவும் குறிப்பிடத் தகுந்த சிறப்புடையவராவர். அவர்களின் அரும் பெரும் புலமையும் பண்புநலமும் கருதித் தமிழறிஞர்கள், அவர்கள் **'நாட்டார் ஐயா'** என்றே சிறப்பித்துப் பெரிதும் அன்புடனும் மதிப்புடனும் வழங்குவர். சிலப்பதிகாரம், அகநானூறு முதலிய சங்கத்தமிழ் நூல்களுக்கும், திருவிளையாடற்புராணம் முதலிய சமயப் பனுவல்களுக்கும், அரிய பெரிய நல்லுரைகளை இயற்றியளித்த பெருமை, நாட்டார் ஐயா அவர்களுக்கு உண்டு. நக்கீரர், கபிலர் முதலிய ஆராய்ச்சி நூல்களையும், அப்புலவர் பெருமான் எழுதியிருக்கின்றார். அவர்தம் அருமை பெருமைகள் அளவிடற்பாலன அல்ல.

(முன் பக்கத் தொடர்ச்சி)

என பாரதியார் புகன்றது கவனத்திற்குரியது. சக்தி அருளின்றிச் சிவமில்லையென்றும், ஞானத் திருவுருவான சிவமின்றிச் சக்தியில்லை என்ற நுண்ணறிவு சிறக்க வாய்ந்தவராய பாரதியார், பராசக்தி எங்கும் தானுயிருந்தாலும், அச்சக்தி சிவனிடம் பிரியாச் சேயிழையாயிருந்து, மக்களது பவமதைப் போக்கும் பராபரையாக விளங்குபவள் எனப் போற்றுவார். பரம் பொருளையும் பராசக்தியையும் வேறு வேருகக் கருதுவது பெரும் பிழையென உணர்த்தவே', பாரதியார்.

'ஆதி பரம் பொருளின் ஊக்கம்—அதை
அன்னை யெனப் பணிதல் ஆக்கம்
மூலப்பழம் பொருளின் நாட்டம்—இந்த
மூன்று புவியுமதன் ஆட்டம்
ஆதிச் சிவனுடைய சக்தி—எங்கள்
அன்னையருள் பெறுதல் முக்தி'

எனக் கூறு முகத்தால் சிவசக்தியின் சிறப்பினை நன்கு துணிதற்கு இஃதொன்றே சாலும்

கடவுள் வாழ்த்து:

சான்றாண்மைப் பண்பு நலங்கட்கெல்லாம் ஓர் ஆழி எனத் தகுந்த, சான்றோராக விளங்கிய நாவலர் திரு நாட்டார் ஐயா அவர்கள், ஒரு கூட்டத்திற்குத் தலைமை ஏற்றருளினார்கள். அப்போது இளைஞர் ஒருவர், கடவுள் வாழ்த்துப் பாடினார். தமிழ் 'வித்துவான்' வகுப்பில் பயின்று கொண்டிருந்த அவ்விளைஞருக்கு நல்ல இசைப் பயிற்சியும் அமைந்திருந்தது.

' அம்மையே! அப்பா! ஒப்பிலா மணியே; அன்பினில்
விளைந்த ஆரமுதே!
பெய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் தனக்குச்
செம்மையே ஆய சிவபதம் அளித்த செல்வமே!
சிவபெருமானே!
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்! எங்கெழுந்
தருளுவ தினியே?''

என்ற பாடலைத் தம் இசைப் பயிற்சித் திறமெல்லாம் விளங்க, அம் மாணவர் இனிது பாடினார். பாடுங்கால் எல்லார்க்கும் பொருள் விளங்குதற் பொருட்டு, மிகவும் உருக்கம் அமைய 'என் அம்மையே அப்பா' என்றும், இம்மையே யான் உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்' என்றும், பலகால் திரும்ப, உணர்ச்சி பெருக, அவ்விளைஞர் இனிது பாடினார். யாவரும் மிகவும் மகிழ்ந்தனர். நாவலர் பெருந்தகை அவர்களின் தலைமையில் கூட்டம் மிகவும் சிறப்புற நிகழ்ந்தது.

நாட்டார் ஐயாவும், மாணவரும்:

கூட்டம் முடிந்த பின்னர், நாட்டார் ஐயா அவர்கள், இசை பாடிய இளைஞரை அன்புடன் அருகில் தனியே அழைத்தார் "தாங்கள் மிகவும் உருக்கமாகப் பாடினீர்களே. அந்தப் பாடலை யார் இயற்றியது? எந்த நூலில் இருக்கின்றது?'' என ஒன்றும் தெரியாதவர் போல இனிமையாக வினவினார்.

இளைஞர் சிறிது தயங்கினார். 'எல்லோருக்குமே அது திருவாசகப் பாடல் என்று தெரியுமே? அப்பாடலைத் தெரியாத வர்கள் தமிழுலகில் யாருமே இருக்கமாட்டார்களே; ஐயா அவர்கள், ஏன் இப்படித் தன்னை வினவுகின்றார்?' என்று இளைஞர் திகைத்து நின்றார். நாட்டார் ஐயா அவர்களோ, ஒன்றும் தெரியாதவர் போல, விடாது மேலும் வற்புறுத்தி அன்புடன் வினவவே, வேறு வழியின்றி அவ் இளைஞர் 'அப்பாடல் திருவாசகத்

தில் உள்ளது' என்று தயங்கித் தயங்கி, அன்புகலந்த அச்சத்துடன் கூறினார்.

உடனே நாட்டார் ஐயா அவர்கள், மிகவும் வியப்புற்றவர் போல, ''அப்படியா! நீங்கள் பாடியது திருவாசகத்திலா இருக்கிறது? மாணிக்கவாசகர் பாடிய திருவாசகத்தைத் தானே சொல்கிறீர்கள்! இப்படி ஓர் அரிய இனிய பாடல் திருவாசகத்தில் இருப்பதை, நான் இதுவரையில் அறிந்து கொள்ளவே இல்லையே!" என்று உண்மையாகவே கூறுவது போல, ஏக்கம் தோன்றப் பேசினார்கள்.

திருவாசகத்தில் உள்ளது:

மாணவரோ ஒரு வகையில் வியப்பும், மற்றொரு வகையில் மகிழ்ச்சியும் அடைந்தார். "இந்தப் பாடல் நாட்டார் ஐயா அவர்களுக்குத் தெரியாமல் இருக்குமா ?" என்று வியப்பு; அதனை நாம் தெரிந்து வைத்துக் கொண்டு அழகாகப் பாடினோமே என்று மகிழ்ச்சி; எனவே அவர் ஓடோடிச் சென்று, ஒரு திருவாசகப் புத்தகத்தை எடுத்துக்கொண்டு வந்தார். அதில் அப்பாடல் உள்ள பக்கத்தைத் திறந்து காட்டினார்.

நாட்டார் ஐயா அவர்கள் அதனை வாங்கி மெதுவாகப் பல முறை திருப்பித் திருப்பிப் பார்த்தார். பார்த்து "இதில் 'அம்மையே அப்பா' என்ற திருவாசகப் பாடல்தானே இருக்கின்றது. 'என் அம்மையே அப்பா' என்ற அழகிய பாடலைக் காணவில்லையே! 'இம்மையே யான் உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்' என்று தாங்கள் முன்பு எவ்வளவு அழகாகப் பாடினீர்கள் ; இதில் அந்தச் சிறந்த பாடல் காணப்பட வில்லையே. 'இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்' என்றுதானே இதில் உள்ளது? தாங்கள் பாடிய அழகிய அந்தப் பாடல் இந்தப் புத்தகத்தில் இல்லையே. அது விடுபட்டுப் போயிற்றா ? அல்லது தவறாக அச்சடித்து விட்டார்களா ?" என்று வினவிக் கொண்டே, அந்தப் புத்தகத்தில் பக்கங்களைச் சிறிது நேரம் புரட்டிப் பார்த்துக் கொண்டிருந்தார்.

மாணவரின் அமைவுரை :

இளைஞருக்கோ ஒரே கலக்கம் ; தாம் செய்த ஏதோ ஒரு குற்றத்தினைத் தான். குற்றம் என்று சொல்லாமல் சொல்லிக் காட்டுகின்றார் அவர், என்று புரிந்து கொண்டார். சிறிது சிந்தித்தார். பின்னர்த் தயங்கித் தயங்கி, ''அச்சிட்டதில் தவறு இல்லை. நான்தான் சில சொற்களைச் சேர்த்துக் கொண்டேன். 'என்

அம்மையே அப்பா' என்றும், 'யான் சிக்கெனப் பிடித்தேன்' என்றும், யாவருக்கும் பொருள் விளங்குவதற்காகப் பாடினேன். என்—யான் என்னும் இரண்டு சொற்களைச் சேர்த்தேன். அவ்வளவு தான்'' என்று தயங்கித் தயங்கிப் பணிவுடன், அமைவுரை கூறினார் இளைஞர்.

நாட்டார் ஐயாவின் நல்லறிவுரை

நாட்டார் ஐயா அவர்கள், புன்முறுவல் பூத்த இனிய முகத்தினராய், ''என்ன அப்பா ; இவ்வளவு எளிமையாகச் சொல்லி விட்டாயே ; அந்த இரண்டு சொற்கள் தம்முடைய உள்ளத் துணர்ச்சியினின்று நீங்கப் பெறுதல் வேண்டும் என்றுதானே, மாணிக்கவாசகர் தம் வாழ்நாள் முழுவதும் அல்லும் பகலும் அரும்பாடுபட்டு உழைத்தார். அவர் எதற்காக அங்ஙனம் பாடுபட்டு உழைத்தாரோ, அந்த இரண்டு சொற்களையே யன்றோ, நீங்கள் வலிந்து புகுத்திச் சேர்த்துக் கொண்டு விட்டீர்கள்; மாணிக்கவாசகர் தம்வாழ்நாள் முழுவதும் பாடுபட்டுழைத்துப் பெற்ற அரும்பெரும் ஞானச் செல்வம் அனைத்தையும், ஒரு நொடிப்பொழுதில் நீங்கள் அழித்து விட்டீர்களே !

''யான் எனது என்னும் செருக்கறுப்பான் வானோர்க்
குயர்ந்த உலகம் புகும்''

என்று ஆசிரியர் திருவள்ளுவர் அருளிச் செய்திருத்தலை, நீங்கள் மறந்து விட்டீர்களா? பொருள் விளங்கப் பாடவேண்டும் என்று நினைத்து, அப்பொருள் களங்கப்படும்படியன்றோ பாடி விட்டீர்கள்!

'**நீர் நமது** * என்றிவை
வேர்முதல் மாய்த்து, இறை
சேர்மின் உயிர்க்கு அதன்
நேர் நிறை இல்லே'' — நம்மாழ்வார்

---

*'''**யான்**' '**எனது**' என்று கூறுவதே மரபு ஆயினும், தீய சொற்களை வழுக்கியும் வாயாற் சொல்லுதல் ஆகாது என்னும் கருத்துப்பற்றி, வழிமொழிதல் முறையாலும் அவற்றைத் தம் நாவினாற் கூற அருவருப்புக் கொண்டு, ஆழ்வார் '**நீர் நுமது**' என்று மாற்றிக் கூறிக் குறிப்பிட்டருளினார். ''நான் எனது என்று தம் வாக்காலே சொல்லமாட்டாரே ஆழ்வார்; நாக்கு வேகும் என்று'' என்பது, அப்பாடலில் பெரியவாச்சான்பிள்ளை அவர்கள் வரைந்தருளியுள்ள அரிய உரைவிளக்கம்.

"யான் செய்தேன் பிறர் செய்தார் என்னுது யான் என்னும்
இக்கோளை ஞானஎரி யால்வெதுப்பி நிமிர்ந்துத்
தான்செவ்வே நின்றிட அத் தத்துவன்தான் நேரே
தலையளித்து முன்னிற்கும் : வினையொளித்திட் டோடும் ;
நான் செய்தேன் எனுமவர்க்கு தன்அங் கின்றி
நண்ணுவிக்கும் போகத்தைப் பண்ணு விக்குங் கன்மம் ;
ஊன்செய்யா ஞானந்தான் உதிப்பி னல்லால்
ஒருவருக்கும் யானெனதிங் கொழியா தன்றே"

—சிவஞானசித்தியார்

"யான்தான் எனும் சொல் இரண்டும்
கெட்டால் அன்றி யாவருக்கும்
தோன்றாது சத்தியம்..." **—அருணகிரிநாதர்**

எனப் பெரியோர்கள் பலர், தத்தம் நூல்களில் அருளிச் செய்திருக்கின்றார்களே ! அவற்றையெல்லாம் நீர் அறவே புறக்கணித்து அழித்து விட்டீரே !

யான் எனது அற்ற ஞானச் செல்வர் :

மாணிக்கவாசகர் ஒப்புயர்வற்ற ஓர் அரும்பெரும் ஞானச் செல்வர் அல்லரோ? அவர் நம்மைப்போல,"யான் எனது என்னும் அகப்பற்று, புறப்பற்று உணர்ச்சிகளை யுடையவராக இருந்திருப்பாரா? இருந்திருந்தால் அவர் ஞானம் பெற்றவர் ஆவாரா?

"யான் எனது என்று அவர் அவரைக் கூத்தாட்டு
வானாகி நின்றாயை என் சொல்லி வாழ்த்துவனே?" (1)

"யான் எனது என் உரைமாய்த்துக்
கோதில் அமுது ஆனானைக்
குலாவுதில்லைக் கண்டேனே" (2)

"ஊன்கெட்டு உயிர்கெட்டு உணர்வு கெட்டு என்
உள்ளமும்போய்
நான்கெட்ட வாபாடித் தெள்ளேணம் கொட்டோமோ?" (3)

"எனை நான் என்பதறியேன்; பகல்
இரவாவதும் அறியேன்" (4)

என்றெல்லாம், மணிவாசகர் ஆங்காங்கே திருவாய் மலர்ந்தருளியிருக்கின்றாரே. அவற்றாலேயே மாணிக்கவாசகர், யான் எனது என்னும் தற்போத இணர்ச்சிகள் நீங்கப் பெற்ற,சிவஞானச் செல்வர் என்று தெரியவில்லையா?

"பால்நினைந் தூட்டும் தாயினும் சாலப் பரிந்துநீ பாவியே னுடைய
ஊனினை யுருக்கி உள்ளொளி பெருக்கி உலப்பிலா ஆனந்தம் ஆய
தேனினைச் சொரிந்து புறம்புறம் திரிந்த செல்வமே! சிவபெரு மானே!
யான்உனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன் எங்கெழுந் தருளுவ தினியே?

என்னும் மற்றொரு திருப்பாடலில், "யான் உனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்'' என்று வந்துளதே எனின்; அங்ஙனம் வந்திருப்பினும், அங்கு 'யானும்' என்ற இழிவு சிறப்பு உம்மை மறைந்து நிற்பதாகக் கொண்டு "யாவர்க்கும் கீழாம் அடியேனும் யாவர்க்கும் மேலாம் அளவிலாச் சீருடைய நின்னைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்துக் கொண்டு உயர்ந்தேன்'' என்றுதான், பொருள் கொள்ளவேண்டும்!

கூட்டவோ குறைக்கவோ அதிகாரம் இல்லை:

மாணிக்கவாசகர் போன்ற ஞானப் பெருமக்கள் பாடிய திருப்பாடல்களில், ஓர் எழுத்தையேனும் கூட்டவோ குறைக்கவோ நமக்கு அதிகாரம் இல்லை. "என்னதோ இங்கு அதிகாரம்" என்று மாணிக்கவாசகர் தாமே பாடியருள்கின்றனர் அன்றோ?

"நவமாய செஞ்சுடர் நல்குதலும் நாம் ஒழிந்து
சிவமான வாபாடித் தெள்ளேணம் கொட்டாமோ"

என்று மணிவாசகர் தாமே அருளிச் செய்துள்ளவாறு, சிவமாந் தன்மைப் பெருவாழ்வு பெற்ற நிலையில், சிவன் முத்தர்களாத் திகழ்ந்த சிவஞானச் செல்வர்களின் திருவருட்பாடல்கள், காரிகை கற்றுக் கவிபாடும் நம் போன்றவர்களின் பாடல்களைப் போல்வன அல்ல. அவற்றை நாம் மிக்க விழிப்புடன் எழுத்துப் பிழையறக் கருத்தூன்றிக் கற்றல் வேண்டும்.

"அழித்துப் பிறக்க ஒட்டா அயில்வேலன் கவியை, அன்பால்
எழுத்துப் பிழையறக் கற்கின்றிலீர்! எரி மூண்டதென்ன
விழித்துப் புகையெழப் பொங்குவெங் கூற்றன் விடும் கயிற்றால்
கழுத்திற் சுருக்கிட்டிழுக்கும் அன்றோ கவி கற்கின்றதே!"

என அருணகிரிநாதர், தம் கந்தர் அலங்காரம் என்னும் நூலில், "பெரியவர்களின் பாடல்களை நாம் எழுத்துப் பிழையறக் கருத்தூன்றிக் கற்றல்வேண்டும் என வற்புறுத்தியிருக்கின்றார் அன்றோ" என. இன்னோரனைய பல தண்ணளி மிக்க அருளுரைகளை, அறிவுரைகளை, மிக உருக்கத்துடன் வழங்கினார்கள்!

ஏறத்தாழ 40 ஆண்டுகளுக்கு முன்னர் நடைபெற்ற இந்நிகழ்ச்சி, என்னுடைய இளம்பருவ உள்ளத்தில் அழுந்தப் பதிந்து, இன்றும் பசுமையாக விளங்கி வருகின்றது. என்னுடைய சிவநெறிச் செந்தமிழ்ப் பற்றினை வளர்த்து, என் உணர்வுகளை வளப்படுத்தி வாழ்வளித்த சான்றோர்கள் பற்பலருள், நாட்டார் ஐயா அவர்கள், குறிப்பிடத் தக்க பெருஞ் சிறப்பு உடையவராவர்!

முடிவுரை

இங்ஙனம் மாணவர் ஒருவர் செய்த ஒரு **சிறுபிழை**, சிறந்த சான்றோர் ஒருவரின் வாயிலாக, ஒரு **பெருவிளக்கம்** வெளிவரக் காரணமாயிற்று. இச் 'சிறுபிழையும் பெருவிளக்கமும்' பற்றிப் பலர் அறிய வெளிப்படாத இச் செய்தி (Anecdote), நம்மனோர் உள்ளத்தில் என்றும் நிலைபெறத் தக்கது ஆகும்.

மணிவாசகர் அருளிய திருவாசகத்தின் அளப்பரிய அரும்பெறல் மாட்சிமைகளை உணர்ந்து கொள்ளுதற்கும்; **நமது நாட்டார் ஐயா அவர்களின் நல்லிசைப் புலமைப் பண்பாட்டின் சிறப்பினை, நாம் நன்கினிது அறிதற்கும்**, 'ஒரு குழிச் சொன்றிக்கு ஓர் அவிழ்பதமாம்'. என்னும் தாலிபுலாக முறையில், இச்செய்தி ஒன்றே இனிதமையும் என, இசைத்தற்குத் தடையும் உண்டோ? வாழ்க நாட்டார் ஐயா புகழ்! வளர்க அவர் தம் பண்பாட்டுப் புலமை நெறி!

"ந. மு. வே." விளக்கம்

நாவலர்கோன் தோன்றியவூர் நடுக்கா வேரி
நல்கியவர் திருமுத்துச் சாமி நாட்டார்
மேவியழைப் பதற்கமைந்த நாம மேசீர்
வேங்கடசாமிப் பெயரென் றெண்ணி நாட்டார்
நாவலர் ந. மு. வே யென் றியம்பு வார், யான்
நலங்கமழும் முத்தமிழ்க்கோர் வேந்தர் என்றக்
காவலரைக் கருதியுவந் தேத்து கின்றேன்
கலைத்தமிழ்த்தாய் மகனன்றோ நம் ந. மு. வே.

சோழரின் கோயிற்கலை

பேராசிரியர். **சி. கோ. தெய்வநாயகம்,**

கரந்தைப் புலவர் கல்லூரி

மனிதனுடைய மனத்தில் அழகு உணர்ச்சியை எழுப்பி மனத்தில் தெளிவையும் இன்பத்தையும் அளிக்கின்ற கவர்ச்சியுடைய கைத்திறனே கலையெனப் பெயர்பெறும். அதனையே அழகுக் கலைகளென்று ஆன்றோர் பெயரிட்டுக் கூறினர்.

இக்கலைகளை ஆசான்வழி பெற்ற அறிவினாலும், சிந்தனைத் தெளிவினாலும், கற்பனைத் திறத்தினாலும் உருவாக்கிப் பார்த்து அதன் நிறைவினைக் கண்டு கண்டு உவப்படையும் உள்ளம் பெற்றவனே கலைஞன்.

கலை உருவாக்கிக் கண்டு மகிழ்ந்த பொருள் காண்பவர் மனத்தில் அழகுக் காட்சியும் இன்பவுணர்ச்சியும் பற்றுள்ளத்தால் நிறைந்த மகிழ்வும் பொருந்துமாயின் கலைஞன் உருவாக்கிய கலையுரு அழகுக் கலையாகத் திகழும்[1] அழகுக் கலைகளை விரும்பாத மனிதவுள்ளம் உலகில் இல்லையென்றே சொல்லலாம்.

அழகுக் கலைகள், கட்டடக்கலை, சிற்பக்கலை, ஓவியக்கலை, இசைக்கலை, காவியக்கலை என ஐந்து வகை பெற்றதாக உலகில் விளங்குகின்றன.[2]

மனிதன் வாழ்க்கைக்கு இன்றியமையாதது குடியிருப்பு. அதனை மண்ணாலும் மரத்தாலும் தொல் பழங்காலத்து மனிதன் ஆக்கிக் கொண்டான். சங்க கால மக்கள் பதன் செய்த மண்ணை அளவிட்டு வடிவாக்கி நெருப்பிட்டுச் சுட்டு ஆக்கிக்கொண்ட 'சுடுமண்' என்னும் செங்கற்களையும், சுண்ணத்தை அரைத்தெடுத்த சாந்தாகும் "சுதை" என்பதைக் கொண்டும் வீடுகளையும், மன்னன் வாழ்கின்ற மாடமாளிகைகளையும், கடவுளரை வைத்துப் போற்றிய கோயில்களையும் உண்டாக்கிக் கொண்டிருந்தனர் [3]

இவ்வாறு ஆக்கிக் கொண்ட செங்கல் சுண்ணாம்பு கட்டட வகைக் கோயில்கள் காவிரிப்பூம்பட்டினத்தில் இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்னரே கட்டப்பட்டிருந்ததைச் சிலப்பதிகாரம், மணிமேகலை என்னும் காப்பியங்கள் தெளிவாகக் குறிக்கின்றன.[4] காப்பியங்கள் தரும் செய்திகளிலிருந்து, காவிரிப்பூம்பட்டினத்தில், சிவன், திருமால் ஆகியோருக்குக் கோயில்கள்

அமைக்கப்பட்டிருந்ததுடன், பௌத்த விகாரங்கள் ஏழு சமணருக் கமைந்த பீடிகைக் கோயில் ஆகியவைகள் வடகரையில் தொடர்ந்த நிலையில் ஆங்காங்கே கட்டப்பட்டிருந்தன என்பது தெளிவாகின்றது.

அக்காலத்தில் மதுரை, திருவேகம்பம், அழகர்மலை, திருவரங்கம், திருவேங்கடம், திருப்பரங்குன்றம், திருச்சீரலைவாய் ஆகிய இடங்களின் கோயில்கள் கட்டப்பட்டிருந்தன.

இத்தகைய கோயில்களை மனைநூல் மரபுப்படி கட்டடக் கலைஞர் அமைத்திருந்தனர்.[6] கி. பி. 600-க்கு முற்பட்டதாகத் தமிழகத்தில் இருந்த கோயில்கள் செங்கற்களைச் சுண்ணாம் பிட்டுக் கட்டிய கட்டடங்களேயாம். ஒரு சில கோயில்கள் மரத்தா லும் அமைக்கப்பட்டிருந்தன.

கி. பி. 4– ஆம் நுற்றாண்டில் இருந்த கோச்செங்கணான் என்னும் சோழன் சிவனுக்கு எழுபத்தெட்டு கோயில்களைக் கட்டி யுள்ளான்.[7] இக்கோயில்கள் பெருங்கோயில் என்னும் பெயருடன் விளங்கியுள்ளன. இக்கோயில்கள் அனைத்தும் செங்கற்றிருப் பணியாகவே அமைக்கப்பட்டனவாகும்.[8]

செங்கற் கட்டட முறையினின்றும் புதியதும் வலிமை மிக்கது மாகியதொரு கட்டட முறையினைப் பல்லவ மன்னர்கள் தோற்று வித்தார்கள். அம்முறையில் கருங்கற்களைக் கொண்டு உருவாக்கப் பட்ட கோயில்கள் கற்றளிகள் என்று பெயர் பெற்றன.

சங்க காலத்தில் செங்கற் கோயில்கள் இருந்து காலத்தால் அழிந்து கிடந்த செய்தியை

"இட்டிகை நெடுஞ்சுவர் விட்டம் வீழ்ந்தென
மணிப்புறாத் துறந்த மரஞ்சேர் மாடத்து
எழுதணி கடவுள் போகலிற் புல்லென்று
ஒழுகுபலி மறந்த மெழுகாப் புன்றிணை"

என்று உருத்திரங்கண்ணனார் கூறியுள்ளார். இச்செய்தியினால் செங்கற் கட்டடங்கள் நிலைத்து இருப்பதில்லை என்பதை அறிகின் றோம்,

கி. பி. 7-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்திருந்த திருநாவுக்கரசர் தமிழகத்தில் அன்றிருந்த கோயில்கள் கட்டடக்கலை வகையான் பெற்றிருந்த பெயர்களைக் கூறியுள்ளார். அவை, பெருங்கோயில்,

இளங்கோயில், ஆலக்கோயில், கரக்கோயில் கொகுடிக் கோயில் என்பனவாகும்[10]

இத்தகைய மனைகளையும், கோயில்களையும் கட்டிய கலைஞர்கள், சிற்பியர், நூலறி புலவர் என்று பெயர் பெற்றிருந்தனர் என்பதை

"ஒரு திறம் சாரா வரைநாள் அமையத்து
நூலறி புலவர் நுண்ணிதிற் கூறிட்டுத்
தேஎங் கொண்டு தெய்வம் நோக்கிப்
பெரும் பெயர் மன்னர்க் கொப்ப மனைவகுத்து"

என்ற சங்கநூற் பகுதியானும்[11],

"அறக்களத் தந்தணர், ஆசான் பெருங்கணி
சிறப்புடைக் கம்மியர் தம்மொடும் சென்று
மேலோர் விழையும் நூல் நெறி மாக்கள்
பால் பெற வகுத்த பத்தினிக்கோட்டம்"

என்று கூறும் சிலப்பதிகாரச் செய்தியானும்[12] சங்க காலத்தில் மனைகளையும் கோயில்களையும் கட்டியவர்கள், திசையறிந்து, மனை கோலி நூல் வரம்பிட்டுக் கட்டடங்களை சதுரித்துக்கொண்டு, பின்னர் முறைப்படி அடிப்படையிட்டுக் கட்டடங்களை எழுப்பியுள்ளனர் என அறிய முடிகிறது.

இக்கட்டடக் கலைஞர்கள் தமிழகத்து மூவேந்தர் நாடுகளிலும் சிறப்புடன் வழிவழியாக வந்துள்ளனர். அப்பரடிகள் குறிக்கும் கோயில்களைக் கட்டிய கலைஞர்களும் இத்தமிழகச் சிற்பியர்களே யாதல் வேண்டும்.

தமிழக மக்கள் நாகரிக வளர்ச்சி பெற்றதற்கமைந்த மனைகளையும் கோயில்களையும் படைத்துத்தந்த அருங் கலைஞர்கள் இவர்களேயாவர்.

இவ்வாறு சங்க காலத்திலிருந்த கட்டடக் கலைஞரின் குடும்ப வழியினரும், மாணவ வழியினரும் கால வளர்ச்சியில் அக்கலையினை, அவ்வக்காலப் புதுமையுடன் வளர்த்து வந்தனர் என்பது இயல்பாகும்.

கி. பி. 7 – ஆம் நூற்றாண்டில் தொண்டை மண்டலத்தில் பல்லவர் தோற்றுவித்த குடைவரைக் கோயில்களையுய் கற்றளிகளையும், உருவாக்கியவர்கள் தமிழகச் சிற்பியரும் கல் தச்சரும் கொற்றருமேயாகும்.

இத்தகு பரம்பரைக் கலைஞர்கள் சோழர் காலத்தில் சோழ நாட்டிலும் வாழ்ந்துள்ளனர். அவர்களைக் கொண்டே விசயாலய சோழன், தஞ்சையில் கொற்றவைக்குக் கோயில் கட்டினான்.[13] ஆதித்தன் காவிரிக்கரை நெடுகிலும் பல சிவன் கோயில்களைக் கட்டினான்.[14] முதற் பராந்தகன் தொண்டை நாட்டிலும் சோழ நாட்டிலும் சிறந்த கோயில்களை அமைத்தான்.[15] செம்பியன்–மாதேவியார் சோழ நாட்டில் சிறந்த கற்றளிகளை அமைத்தார்கள்.[16]

இவ்வாறாக விசயாலயன் முதலாகத் தொடர்ந்த சோழர்கள் கட்டத் திட்டமிட்டக் கோயில்களை, அரசன் விரும்பிய வடிவில் கருங்கற்களாலும் செங்கல் சுண்ணங்களாலும் படைத்துத் தந்த கலைஞர்கள் இராசராசன் காலத்திலும் வாழ்ந்துள்ளனர். அவருள் கோயில்களைக் கற்றளியாகக் கட்டுவதில் கை தேர்ந்த முதிய சிற்பியர்கள் இருந்திருப்பது இயல்பு. அவர்களைப் போலவே செங்கல் சுண்ணம் ஆகியவற்றைக் கொண்டு மாடமாளிகைகளைப் படைக்கும் விற்பனர்களாகிய கொற்றர்களும் அனுபவத்திலும் வயதிலும் முதிர்ந்தவர்களாக இருந்திருப்பர்.

இத்தகைய சிற்பியர், கொற்றர் ஆகியவர்களை அழைத்தே இராசராசன் தான் அமைக்க விரும்பும் பெருங்கோயிலைப் பற்றிய விபரங்களைத் தெரிவித்திருக்க வேண்டும். அக்கலைஞர்கள் அரசன் விரும்பும் வடிவில் கோயிலை ஆக்குதற்கு அவரவர் சிறப்பாகவும் நுட்பமாகவும் கையாண்ட கலைத்திறனையும் கட்டட முறைகளையும் கலந்து பேசி ஒரு முடிபு செய்து கட்ட இருக்கும் கோயிலை வரைந்து திட்டப்படுத்தியிருப்பர்.

இவ்வாறு தஞ்சையில் பெருங்கோயிலைக் கட்டுதற்குத் தேவைக் கேற்பச் சோழநாட்டுச் சிற்பியர், அரசுவழி பிறநாட்டுச் சிற்பியர்களையும் இணைத்துக் கொண்டு செயல்பட்டிருக்கலாம்.

சிற்பியர்கள் அவ்வவர்க்குரிய சமயச்சார்புடன் சைவராகவும் வைணவராகவும், அருகராகவும், பௌத்தராகவும் இருப்பது சமுதாய இயல்பேயாம், ஆயினும், மன்னனது ஆணைப்படி அவன் மகிழுமாறு தத்தமது கலைத்திறனைக் கொடுக்கப்பட்ட கட்டட வேலைகளில் காட்டி மகிழ்வது கலைஞனின் இயல்பாதலின், அம்முறையிலேயே தஞ்சைப் பெரிய கோயிலை உருவாக்குதற்குப் பன்னூறு சிற்பியரும் ஆயிரக்கணக்கில் கருங்கற்களை அளவிட்டு உளியால் உடைத்து ஒழுங்குபடுத்தும் கல் தச்சரும் தஞ்சையில் அன்று இருந்தார்கள் என்பது கருத்தமைந்த செய்தியாக அமைகிறது.

இவருள் பராந்தக சோழன் காலம் முதலாகச் சோழமன்னர் விரும்பியவாறு கற்கோயில்களை அமைத்துத் தந்தவனும் அதனால் அரசர்களால் பாராட்டப் பெற்றிருந்தவனுமாகிய பழுத்த அனுபவமும் திட்பமும் வாய்ந்த சோழ நாட்டு சிற்பி ஒருவனைத் தலைமைச் சிற்பியாகக் கொண்டே இராசராசன் இம்மாபெரும் கோயிலைப் படைத்துள்ளான்.[17]

கற்கள் தேர்ந்த மலைகள்-கொணர்ந்த வழிகள்

ஒரு கற்கோயில் கட்டுவதற்கு முன்னர் அக்கோயிலின் வடிவை வரைந்து திட்டப்படுத்திய சிற்பியர், அதற்கேற்ற கருங்கற்களை உடைய மலைகளைத் தேர்வதும் உடைத்தெடுத்த பாறைகளை ஏற்றி வருதற்குரிய வாகனங்களை அமைத்துக் கொள்வதும், மலையிலிருந்து கோயில் அமையும் இடம் வரையில் குறுக்கு வழியாகவும் செம்மையான தரை வழியாகவும் தேர்ந்து, பாதையினைச் செப்பனிட்டுக் கொள்வதும் இயல்பாதலினால் அச்செயல்களை வகுத்துக் காட்டும் முயற்சியேயாகும்.

சிற்பியர்கள் தேர்ந்த நாரத்தமலை மேலைக்குன்றும் அதனைச் சார்ந்த கடம்பர் மலையும், கொடி, வெடிப்பு, குறுக்கு ரேகை, இரு பிறப்பு நிலை, சுழிப்பு ஆகிய குற்றங்கள் இல்லாத நற்பாறைகளைப் பெற்ற குற்றங்களாதலினாலும், முன்னர் கடம்பர்மலை அடிவாரத்தில் முத்தரைய மன்னர் கட்டிய கடம்பர் கோயில், மேலைமலை உயர்தடத்தில் உருவாக்கிய விசயாலய சோளீச்சரம் ஆகிய பெருங்கோயில்கள் அம்மலைகளின் கற்களைக் கொண்டே சிற்பியர் ஆக்கியுள்ளதினாலேயும், அவ்வாறுள்ள முன்னனுபவத்தினைப் பின்பற்றியே தஞ்சையில் கோயில் கட்டுதற்குரிய கற்களைச் சிற்பியர் இம்மலைகளில் வெட்டிக் கொணரத் திட்டமிட்டுள்ளனர்.[18]

இத்திட்டத்தினை இராசராசனும் நேரிற் சென்று கண்டு அனுமதித்திருக்க வேண்டும். இராசராசன் நாரத்தமலை விசயாலய சோளீச்சரத்திற்குச் சில நிவந்தங்களைச் செய்துள்ள கல்வெட்டொன்று அக்கோயிலில் துவாரபாலகரின் கீழுள்ள கட்டட முகப்பில் பொறிக்கப்பட்டுள்ளமையின் இக்கருத்தினை உணர முடிகின்றது.[19]

எனவே கி. பி. 1001-ல் இருந்து நார்த்தமலையின் மேலைமலைப்பகுதியிலும், கடம்பர் குன்றிலும், திருச்சிராப்பள்ளி குன்றின் அடிவாரப் பகுதியிலும், அடுத்து மேற்கே உள்ள உய்யக்கொண்டார் மலைப்பகுதிகளிலும் கல் தச்சரின் உளிகள் செயல்படத் தொடங்கியிருக்கலாம்.

பெரும் பாறைகளினின்றும் உளியால் வெட்டி எடுக்கப்பட்ட பாறைகள் எடுத்த இடத்திலேயே சிற்பியரால் 'ஆசிடப் பெறுதல்' என்னும் நூல் அளவிடப்பட்டு தேவைக்குரிய பகுதிக்குமேல் அமைந்த பகுதிகளைக் கல் தச்சர்கள் சிதைத்து நூலிட்ட அளவில் உருவான கற்களை பட்டரை வண்டிகளில் ஏற்றித் தஞ்சைக்கு அனுப்பும் செயலில் ஈடுபட்டிருகக்லாம்.

கி.பி 1001 முதல் கி.பி. 1004 அளவில் இடையராது மலைகளிலிருந்து பாறைகள் தஞ்சைக்கு கொணரப்பெற்று ஆங்காங்கே கோயில் அமைக்கத் திட்டமிட்ட இடத்தில் குவிக்கப்பெற்றிருக்க வேண்டும்.

சதுரித்தல்

சோழநாட்டுப் பெருஞ்சிற்பியர் கி.பி. 1004-ல், நன்னாளில் கோயில் கட்டும் இடத்தினைச் சீர் செய்து குறிப்பிட்ட கட்டடங்கள் தொடங்க வேண்டிய பகுதிகளில் அவ்வவற்றின் அமைப்புக்குரிய வடிவுடைய கற்களை பட்டரை வண்டிகளில் வரும்போதே ஆங்காங்கு இறங்கியிருக்க வேண்டும்.[20]

இராசராசேச்சரத்தின் தலைவாயில் நிலைச் சட்ட கற்கள் பெரிய அளவில் 20 அடி உயரமுள்ள ஒரே கற்களாக இருப்பதனைக் கொண்டும், மேலே துலாக்கற்களும் விட்டக் கற்களும் பெரிய வடிவங்களில் இருப்பதினாலேயும் இக்கருத்தினை உருவாக்க முடிகின்றது.[21]

பாறைகளைக் கொண்டுவரும்போதே அவைகளை கட்டட அமைப்புக்குரிய அளவிலும் வடிவிலும் உருவாக்கித் திட்டமிட்ட இடத்தில் கட்டடத்தில் நிறுத்தவோ, அல்லது சாரங்கட்டி அதன் வழியே மேலே ஏற்றி அமைக்கவோ வேலை இலகுவாக அமையும் பொருட்டு அவ்வவ்விடங்களில் அருகில் பாறைகளை இறக்கிக் கொள்ளுதல் தொழில் நுட்பமாகும்.

வழிபாட்டுக்குரிய சிறந்த தெய்வ மூர்த்தங்களைப் படைப்பதற்கு வடதிசையிலிருந்து கற் கொணர்தல் மரபாதலின் அவ் வழக்கின்படி, சிற்பியர் தேர்ந்த, குற்றமற்ற கற்கள் கிடைப்பது **திருவண்ணாமலை**யினைச் சார்ந்த குன்றுகளாக அக்காலத்திலிருந்தே அமைந்த வழக்காதலின் அப்பகுதிக் குன்றங்களில் அளவுடன் பெயர்த்தெடுக்கப்பட்ட கற்கள் மாரியின்றிப் பருவ நாட்களில் பட்டரைகளில் ஆறுகள் பலவற்றைக் கடந்த நிலையில் தஞ்சைக்குக் கொண்டுவரப் பெற்றிருக்கலாம். இன்றும் சோழ

நாட்டில் வழிப்பாட்டுக்குரிய மூல மூர்த்திகளை உருவாக்குதற்குத் திருவண்ணாமலைப் பகுதிகளிலிருந்து குற்றமற்றதும் நயம் பொருந்தியதுமான கற்கள் கொணரப்பெறும் வழக்கு இருப்பதைக் கொண்டு இக்கருத்தினைக் கூறவியலுகின்றது.[22] தஞ்சை இராசராசேச்சரத்தில் மூலவராகவுள்ள பெருவுடையார் எனும் பெயரில் விளங்கும் இலிங்க உருக்கல் நருமதையாற்றங்கரையினின்றும் கொண்டுவரப் பெற்றதென்பது வரலாறு தரும் செய்தியாகும்.[23]

இவ்வாறாகச் சிற்பியரின் திட்டப்படி மலைகளில் அளவிட்ட கற்களைக் கல்தச்சர்கள் உடைத்தெடுத்துத் தஞ்சைக்கு அனுப்பிய செயல் ஏறத்தாழ மூன்றாண்டுகள் நிகழ்ந்துள்ளது.

நாரத்தமலைக் குன்றங்களிலிருந்தே பெரும்பான்மையான கருங்கற்கள் தஞ்சைக்குக் கொணரப் பெற்றுள்ளன என்பதை மற்றுமொரு சான்றினால் கொள்ள முடிகின்றது.

தஞ்சைக்கு மேற்கேயும், தென்மேற்கேயும் நாரத்தமலைத் தொடரின் கிழக்கு அடிவாரப் பகுதிகளளவிலும், தொலை நோக்கில் காணும்போது வல்லம், கந்தர்வக்கோட்டை, பெருங்களூர், கீரனூர் முதலிய பகுதிகளில் ஊரைச் சார்ந்தும் இடையிட்ட காட்டுப் பகுதிகளிலும் மிகப் பழமையுடன் காணப்படும் மண்டபங்கள் காலத்தாலும் மக்கள் தேவைகளாலும் இடிக்கப்பட்டும், இடிபாடுகளுடன் தொடர்ந்தும் எஞ்சி நிற்கின்றன. அவற்றின் பழமை இராசராசனின் ஆட்சிக்காலத்தினை அளவு கொள்ளுதற்குரிய அமைப்பில் உள்ளன.[24] இம்மண்டபங்கள் நாரத்தமலைப் பகுதிகளிலிருந்து கற்களைப் பட்டரை வண்டிகளில் ஏற்றிப் பளுவிற்குத் தகுந்தாற்போல் பாரத்தினை இழுக்கும் யானைகளையும் மாடுகளையும் கட்டிக் கொணர்ந்த வேலையாட்கள் வழியிடையே ஓய்வு கொள்ளவும், உணவு கொள்ளவும், யானைகளும் மாடுகளும் இரை கொண்டு களைப்பாறவும் அமைக்கப்பட்ட இடங்களாகவே இம் மண்டபங்கள் இருந்திருக்கலாம். இம்மண்டபங்கள் அரசன் உத்தரவுப்படி அதிகாரிகளும் பணியாட்களும் தங்கியிருந்து உணவும், பிற உதவிகளைச் செய்ததுடன், பாறைகள் தஞ்சைக்குச் செல்வதற்குரிய வழித்தடத்தினையும் அவ்வப்போது சீர் செய்து தந்திருக்கக்கூடும். அதிகாரிகள் பாறைகள் தொடர்த்து செல்லும் செயலில் தடை ஏற்படாமல் கண்காணிப்பும் செய்திருப்பது இயல்பேயாகும்.

சிற்பியர்-தேர்வு

சோழநாட்டில் வழிவழியாக கருங்கற்களைக் கொண்டு கோயில்களை அமைக்கும் கட்டிடக்கலை நுட்பங்களை நன்கு அறிந்து

அனுபவத்துடன் தேர்ந்த சிற்பியர்கள் விசயாலய சோழன் காலம் முதலாக இருந்துள்ளனர். அவர்களின் பரம்பரையினராகச் சிற்பத் தொழிலிலும், கட்டடக்கலைத் தொழிலிலும் வல்லுநர்களாக விளங்கிய சிற்பியர் கல்தச்சர்கள், கொற்றர்கள் இராசராசன் காலத்திலும் இருந்துள்ளமை இயல்பேயாகும்.

அத்தகைய சிற்ப வல்லுநர்களில் தலைசிறந்த அனுபவத்தால் நாடு மதித்திருந்த சிற்பியரை வருவித்த இராசராசன், தான் அமைக்க விரும்பும் கோயிலின் அமைப்பினை, விளக்கமாகத் தெரிவித்திருத்தல் அரச நிலைக்கு அமைந்தது ஆகும். மன்னனின் மாண்பமைந்த மனத்தில் உருவாகி நிற்கும் கோயிலின் வடிவினை சிற்பி விளக்கமாக அறிந்துகொள்வதற்கு இராசராசன் தான் நேரில் கண்டு தெளிவு செய்து கொள்வதற்குரிய மூலங்களாக இருந்த கோயில்களையும் அவற்றின் விமானங்களையும் சிற்பிக்குச் சான்றாகக் கூறியிருத்தலும் இயல்பேயாகும்.

அவ்வாறு இராசராசன் குறிப்பிடுதற்குரிய கோயில்களாக அவனது ஆட்சிக்காலத்திற்கு முன்னர் தமிழகத்தில் மன்னர்களால் உருவாக்கப்பட்டிருந்த கோயில்களுள்,

பல்லவர் காலத்தில் மகாபலிபுரத்தின் ஒற்றைக்கல் கோயில் களுள் தருமராசர் இரதம் என்ற பெயருடன் விளங்கும் கல்லைக் கலைவடிவாக்கிச் சிற்பியர் காட்டியுள்ள கோயிலின் விமான அமைப்பு முறை முதலிடம் பெற்றிருக்க வேண்டும். [26]

இரண்டாவதாக, அடுக்குகளாக மேன்மேலும் குறுகிச் சென்று கும்பிட்டு நிற்கும் விமானத்தோடு நிற்பதும், கருங்கற்களைக் கொண்டு கட்டப்பட்டதுமாகிய கடற்கரை தலசயனப் பெருமாள் கற்றளி குறிப்பிடப்பெற்றிருக்க வேண்டும். =

மூன்றாவதாக இராசசிம்ம பல்லவன், கடற்கரைக் கோயிலின் விமானப் பாங்கில் பெரிய வடிவை அமைத்து நிறுத்தியுள்ள கைலாசநாதர் கோயிலின் விமானம் சிறப்பாகக் குறிப்பிடப் பெற்றிருக்க வேண்டும். [27]

பின்னர் இவற்றின் தோற்ற வடிவில் ஒரு பெருமிதமான புதிய வடிவைக் காட்டுவதற்கு நாரத்தமலை மேலை மலைத்தளத்திலுள்ள விசயாலய சோளீச்சரம் இடம்பெற்றிருக்க வேண்டும்.

விசயாலய சோளீச்சரத்து விமானத்தில் சிற்பியர் அமைத்துக் காட்டிய புதுமை, அடியில் நாற்கோணமாக அமைந்து எழுந்து

செல்லும் பாங்கிலிருந்து திரிந்து வட்ட வடிவில் விமானம் வளர்ந்து சிகரத்துடன் சிறந்து எழுந்து தோற்றங் கொள்ளும் கட்டடப் பாங்காகவே அமையும்.[18]

இவற்றையெல்லாம் மன்னன் காட்டிய வழிமுறையறிந்து இவற்றின் கட்டட அமைப்பு முறையை அடியொற்றியதாகவும், ஆனால் புதியதொரு படைப்பாகவும் உருவாக்கத் தலைமையான சிற்பி தனது கலையறிவின் அனுபவ திட்பத்தினால் பல காலம் சிந்தித்து வரைபடமிட்டு உருவாக்கியதற்குப் பல கை தேர்ந்த கருங் கற்கட்டடச் சிற்பியரும் கல்தச்சரும் கொற்றரும் தங்களது அனுபவத் திறனை அதற்கு உதவியாக அளித்திருக்கக்கூடும்.

மகாபலிபுர ஒற்றைக்கல் கோயில்களுள் தருமராசர் இரதமும், கி.பி. 8-ஆம் நூற்றாண்டில் பாண்டிநாட்டுக் கழுகுமலையில் அமைக்கப்பட்ட வெட்டுவான் கோயிலும் பாறைகளில் உளிகளின் வன்மையால் உருவாக்கப்பட்ட பாறைக்கோயில்களாதலின் அவிற்றில் கட்டுமான முறைமை கையாளப்பெறாமல் உருவத் தோற்றப் புலப்பாட்டுத் தன்மை அமைதலினால் அவற்றின் விமான அமைப்பினையும் தோற்றத்தினையும் சிற்பியர் சிந்தித் திருக்கலாகும்.

இராசராசன் கருங்கற்களைக் கொண்டு புதிதாகக் கட்டுமானக் கோயிலை உருவாக்கத் திட்டமிட்டதால், அதற்கமைந்த அடிப்படை ஒப்புமைகளாக, மகாபலிபுரம் கடற்கரைக் கோயிலும், காஞ்சி கைலாசநாதர் கோயிலும், கட்டுமானக் கோயில்களாதலின் அவை களே அடிப்படை எடுத்துக்காட்டாகவும், விசயாலய சோளீச்சர விமானக் கட்டமைப்பு, தாம் எழுப்பத் திட்டமிட்ட விமான அமைப் பிற்குத் தோற்றுவாயாகவும் சிற்பியரின் சிந்தனையில் இடம்பெற் றிருந்தது எனலாம்.

சோழநாட்டுச் சிற்பியர் உருவாக்கவிருக்கும் கலைக் கோயிலின் வடிவ அமைப்பிற்குச் சமண, பௌத்த மதச் சார்பில் காஞ்சியிலும், வட நாட்டிலும் பல்வேறு காலங்களில் கட்டப்பட்டிருந்த விகாரை களின் அடிப்படை, மேற்படைச் சிகரம் ஆகிய கட்டமைப்புகள் தந்த கருத்தும் கட்டப்பட்டிருப்பதற்கு ஏது இருக்கலாம்.[19]

சுந்தர சோழனது ஆட்சியில் அம்மன்னன் சிவபெருமானி டத்தில் பெரிதும் ஈடுபாடுடையவனாயினும் பௌத்த சமயத்திற்கு ஆதரவு தந்தனவாகவே இருந்துள்ளான். இதனை,

தென்னாற்காடு மாவட்டத்தில் உலகபுரம் என்ற ஊரில் சுந்தரசோழப் பெரும்பள்ளி என்னும் புத்தக்கோயில் ஒன்று இம் மன்னன் ஆட்சியில் சிறந்திருந்ததினாலும்[30]

பௌத்த சமயத்தினராகிய தமிழ்ப் புலவர் ஒருவர் இவ்வரசனின் வாழ்வும் வண்மையும் ஆட்சியும் உலகில் சிறந்து வளர்ந்து விளங்குமாறு புத்தர் பெருமானை வேண்டிப் பரவியுள்ள பாடலொன்று வீரசோழியம் யாப்புப் படலத்தில் இடம் பெற்றுள்ளது.

அப்பாடல்,

'போதியந் திருநிழற் புனிதநிற் பரவுதும்
மேதகு நந்திபுரி மன்னர் சுந்தரச்
சோழர் வண்மையும வனப்பும்
திண்மையும் உலகிற் சிறந்துவாழ் கெனவே''

என்பதாகும்.[31]

இவ்வாறாக, இராசராசனின் தந்தையின் ஆட்சியில் பௌத்தக் கோயில்களும், பௌத்தப் புலவர்களும் இருந்துள்ள பேன்மையினால் பௌத்தச் சமயச் சார்புடைய துறவிகளாகிய தேரர்களும், பௌத்த விகாரங்களை உருவாக்கிய சிற்பியர்களும் சோழநாட்டில் வாழ்ந்திருக்க வாய்ப்புள்ளதெனை அறியலாகும்.

இவர்களின் கட்டடக் கட்டுக்கோப்பு நுண்தொழிலின் கைத்திறன் வகையும், கட்டட வடிவமைப்பு முறையும் இராசராசன் கட்டவிழைந்த பெருங்கோயிலின் அமைப்புத் திட்டத்திற்கு உதவியிருக்கக் கூடும்.

விசயாலய சோளீச்சரத்து விமானத் தோற்றத்தின் மிகுந்த வளர்ச்சியாக தஞ்சையில் அமைக்க இருந்த விமானத்திற்குரிய ஒப்புமையாக, அக்காலத்திருந்தவர்களும் யாத்திரையாக புத்தர் பிறந்த இடங்களுக்குச் சென்றுவந்தவருமாகிய தேரர்கள் புத்தர் பிறந்த 'புத்தகயா' என்னும் இடத்தில் நான்கு பட்டையாக வானளாவி உயர்ந்து, சிகரத்தோடு நிறைந்து கலசத்தினால் அளவிட்டு அழகுடன் நிற்கும் பாங்கில் உருவாக்கப்பட்டுள்ளதும் கி. பி. எட்டாம் நூற்றாண்டில் எழுப்பப்பட்டதுமான கட்டுமான விமானத்தின் தோற்றத்தினை அளவிட்டு அறிமுகம் செய்திருக்க வேண்டும்.

புத்தகயாவிலுள்ள புத்தர் கோயிலின் விமானப் படைப்பு, தஞ்சையில் உருவாக்கவிருந்த பெருங்கோயிலின் விமானப்

படைப்பிற்கு ஒரு முன்னோடியாகவும் பின்பற்றிய வடிவாகவும் ஒப்புமை கொள்ளக்கூடியதாகவே உள்ளது.[81]

இத்தகையதாகத் தஞ்சையில் சோழநாட்டுச் சிற்பியர் பல இடங்களில் முன்னர் தோற்றுவிக்கப்பட்ட விமான வகைகளை ஆராய்ந்து முடிபு கொண்ட நிலையில் அவற்றை உருவாக்கிய சிற்பியர்களின் வழியினராகிய கலைஞர்களையும் அரசனின் ஆணைவழிவர வழைத்து, கட்டஇருக்கும் கோயிலின் புறத்தோற்ற ஒப்பனை முறைகளை ஆராய்ந்திருக்கலாகும். இவ்வழியே காந்தாரக் கலைஞரும், குப்த வாகாடகக் கலைஞரும், பல்லவ நாட்டு ஒற்றைக்கல் கோயில்களை உருவாக்கிய கலைஞரின் வழியினரும் தஞ்சையில் கூடி, அவ்வவரின் அனுபவ திட்டங்களைக் கூறிய முறையினையும் ஆய்ந்து தேர்ந்து சோழநாட்டுச் சிற்பியரும் கொற்றரும் தஞ்சையில் மன்னன் கண்டு மகிழுமாறு உயர்ந்த விமானத்துடனும் பெருமிதமான வாயில்களுடனும் மாடக்கோயில் அமைப்பு முறையில் கட்டுமானக் கோயில் எழுப்பத் திட்டமிட்டுச் செயல்படுத்தத் தொடங்கினர் என்று சிந்தித்துக் கூறுவது பொருந்துவதாகவே அமையலாகும்.

அடிக்குறிப்புக்கள்

1. தமிழர் வளர்த்த அழகுக் கலைகள், பக்கம். 2.
2. மேலன உள்ளுறை
3. தமிழகக் கோயிற் கலைகள். பக்கம். 3.
4. சிலப்பு 5 ; 7 – 9
5. சிலம்பு 10 ; 10 – 25
6. மேலன 28 ; 222 - 225
7. நாவுக்கரசர் தேவாரம், திருத்தாண்டகம், பா. எண். 5
8. தமிழர் வளர்த்த அழகுக் கலைகள், பக். 10
9. அகநானூறு பாடல், 167.
10. தமிழர் வளர்த்த அழகுக் கலைகள். பக். 21.
11. நெடுநல்வாடை, வரிகள் 75 – 78
12. சிலம்பு 28 ; 222-225
13. S. I. I. Vol III Ins. No. 205 Ver. 46.
14. பிற்காலச் சோழர் வரலாறு, பக். 29.
15. மேலன, பக். 54.
16. மேலன, பக். 64.

17. தலைமைச் சிற்பி ஒருவனது மேற்பார்வையின்கீழ் பன்னூறு சிற்பியர் செயற்பட்டே கோயில்கலை உருவாக்கியுள்ளனர். தஞ்சைப் பெரிய கோயிலில் கல்வெட்டுக்களை வெட்டுதற்குக் கூட இராசராசன், இரவி என்ற சிற்பியின் தலைமையிலேயே பல சிற்பியரைச் செயற்பட வைத்துள்ளமையினை எனது அண்மைக்கால கல்வெட்டுக் கண்டுபிடிப்பு காட்டுகிறது.
காண்க. தமிழ்ப் பொழில், துணர்
"புலங்காணாப் புதுக் கல்வெட்டுக்கள்"
18. Great Temple at Tanjore. P. 12.
19. சோழர் கலைப்பாணி பக்கம். 45.
20. இன்று செய்மூர்த்தங்கள் உலாப்போதற்குப் பயன்படும் நான்கு அல்லது ஆறு சக்கர தள்ளுவண்டிகள் பட்டரைகள் எனப்படும்.
21. கேரளாந்தகன் வாயிலின் நிலைச்சட்டக் கற்கள் இப் பெரு வடிவில் காணப்படுகின்றன.
22. சோழற் கோயிற் பணிகள், பக். 62.
23. மேலன
24. இவ்விடங்களில் கள ஆய்வுகளைத் தொடர்ந்தால் மேலும் பல வரலாற்றுண்மைகளைக் காண முடியும்.
25. தமிழகக் கோயிற்கலைகள், பக். 52.
26. Pallava Antiquities – P. 18.
27. Pallava Architecture – PP. 28, 29.
28. An Introduction to the study of Temple Art, P. 52.
29. Pallava Antiquities. P. 20.
30. A. R. Ms. No. 141 of 1919.
31. வீரசோழியம், யாப்பு, செய்யுள், 11.
31. Indian Art, P. 67.

வாழ்க்கையின் குறிக்கோள்கள்

அர. சேஷாசலம்
முன்னாள் முதல்வர்
சேதுபதி அரசினர் கலைக் கல்லூரி, இராமநாதபுரம்

1. மாந்தர்க்கு உறுதி பயக்கும் பொருட்கள் நான்கு. அவை அறம், பொருள், இன்பம், வீடு என்பன.[1] இவை வடமொழியில் சதுர்வித புருஷார்த்தங்கள் எனப்படும். ஆயினும் இவற்றில் மூன்றைப் பற்றி மட்டுமே, மிகப்பழைய தமிழ் நூல்களும் வட நூல்களும் கூறுகின்றன. அவை அறம், பொருள், இன்பம், "அவை (தரும சூத்திரங்கள்) வாழ்க்கையின் மூன்று குறிக் கோள்களையும் (அறம், பொருள், இன்பம்) சம அளவில் வலியுறுத்துகின்றன. ஆனால் அவை வீட்டைப்பற்றி ஒன்றும் கூறவில்லை".[2] சங்க நூல்கள் மூன்று குறிக்கோள்களையே வலியுறுத்துகின்றன. தமிழில் முதலில் எழுந்த தொல்காப்பியம் இன்பம் பொருள். அறம் ஆகிய மூன்றையும் குறிப்பிடுகின்றது. இன்பமும், பொருளும், அறனும் என்று ஆங்கு தொல்காப்பியம், பொருளதிகராம், களவியல் 89 இளம் பூரணம் இம்மூன்றில் வரிசைக் கிரமமும் சிறிது பிறழ்ந்து இருக்கிறது. திருக்குறள் முதலாய நூல்கள் அறம், பொருள், இன்பம் என்றே கூறுகின்றன.

> அறம் பொருள் இன்பம் உயிரெச்சம் நான்கின்
> திறம் தெரிந்து தேறப்படும் —குறள், 501

நல்வழியில் ஈட்டிய பொருளால், அறத்தையும் இன்பத்தையும் ஈட்டிக் கொள்ளலாம்.

> அறம் ஈனும் இன்பமுய ஈனும் திறன் அறிந்து
> தீதன்றி வந்த பொருள் —குறள், 754

> ஒண்பொருள் காழ்ப்ப இயற்றியார்க்கு எண்பொருள்
> எனை இரண்டும் ஒருங்கு —குறள், 760

நெறியான் வரும் பொருளை இறப்ப மிகப் படைத்தார்க்கு, மற்றை அறனும் இன்பமும் ஒருங்கே எளிய பொருள்களாம் என்று பரிமேலழகர் உரை எழுதுவதால், பொருளைப் பேரளவு தேட வேண்டும் என்பது புலப்படும்.

---

1. இந்திரன் முதலிய இறையவர் பதங்களும் அந்தமில் இன்பத்தழிவில் வீடும் நெறியறிந்து எய்துவதற்குரிய மாந்தர்க்கு உறுதியான உயர்ந்தோரால் எடுக்கப் பட்ட பொருள் நான்கு என்று பரிமேலழகர் திருக்குறள் உரைப்பாயிரத்தில் கூறுகிறார்.

அறவாழி அந்தணன் தாள் சேர்ந்தார்க்கு அல்லால்
பிறவாழி நீந்தல் அரிது குறள் 8

'பிற' என்பதற்கு ஏனைப் பொருளும், இன்பமும் எனப் பரிமேலழகர் பொருள் கொண்டார்.

பெண்ணேவல் செய்வார்க்கு உறுதிப்பொருட்கள் மூன்றும் இல்லையாம் என்ற கருத்து

அறவினையும், ஆன்றபொருளும், பிறவினையும் பெண்ணேவல் செய்வார்கண் இல் என்ற குறளில் பொதிந்திருக்கிறது.

பிற பழந்தமிழ் இலக்கியங்களும் மூன்று உறுதிப் பொருட்களையே வலியுறுத்துகின்றன.

அறம், பொருள், இன்பம், இம்மூன்றின் —
கலித்தொகை, நெய்தற்கலி, அடி 3

அதனால் அறனும் பொருளும் இன்பமும் மூன்றும்
—புறநானூறு, 28, அடி 15

சிறப்புடை மரபின் பொருளும் இன்பமும்
அறத்து வழிப்படூ உம் தோற்றம் போல —
புறநானூறு, 31, அடிகள் 1—2

அறத்தையும், பொருளையும் ஐங்குறுநூறு விரித்துரைக்கின்றது.

பாட்டு 1 (2) பொன் பெரிது சிறக்க நெற்பல பொலிக
பாட்டு 2 (2) விளைக வயலே வருக இரவலர்
பாட்டு 3 (2) பால் பல ஊறுக பகடு பல சிறக்க
பாட்டு 4 (2) பகைவர் புல்லார்க பார்ப்பார் ஓதுக
பாட்டு 5 (2) பசி இல்லாகுக பிணிகள் நீங்குக
பாட்டு 6 (2) வேந்து பகை தணிக யாண்டு பல நந்துக
பாட்டு 7 (2) அற நனி சிறக்க அல்லது கெடுக
பாட்டு 8 (2) அரசு முறை செய்க களவு இல்லாகுக
பாட்டு 9 (2) நன்று பெரிது சிறக்கதீது இல்லாகுக
பாட்டு 10 (2) மாரி வாய்க்க வள நனி சிறக்க... ஐங்குறுநூறு, வேட்கைப் பத்து

கலித்தொகை 'தோற்றம் சால் தொகு பொருள்' (பாலைக்கலி, 17, அடி 10) எனக் கூறுகிறது. தொகு பொருளாவன அறமும்,

2. India of vedic kalpasutras, National Publishing House, 96 Daryaganj, Delhi, 1959. P. VIII

பொருளும். இன்பமுமாம் என்பர் உரையாசிரியர், 'செய்பொருள், சிறப்பு எண்ணி' என்று மேலும் கலித்தொகை கூறும்—குறிஞ்சிக் கலி, 16, அடி 18.

நாலடியும் மூன்று உறுதிப் பொருட்களைப் பற்றி நவில்கிறது. ஒருவன் பொருளை எய்தினல் ஏனைய இரண்டையும் எய்தலாம் என்ற கருத்து

வடுவிலா வையத்து மன்னிய மூன்றில்
நடுவணது எய்த இருதலையும் எய்தும்
ஒத்த குடிப்பிறந்தக் கண்ணும் ஒன்று இல்லாதார்
செத்த பிணத்திற் கடை — நாலடி, [28]

சிலம்பும் ஐந்திணை மருங்கின் அறம், பொருள், இன்பம், எனக் கூறுகிறது—சிலப்பதிகாரம், நூற்கட்டுரை, அடி 4

1.1 இதுகாறும் கூறியவற்றிலிருந்து பண்டைத் தமிழாசிரியர்கள் வீடு அல்லது மோட்சத்தைப் பற்றி ஒன்றும் கூறவில்லை என்று சொள்ளக் கூடாது. அவர்கள் வீட்டைப் பற்றியும் கூறிய நிலையிலும் அதை விரித்துரைக்கவில்லை. திருக்குறள் அறம், பொருள், இன்பம் என்ற மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருப்பதனல் 'முப்பால்' எனப் பெயர் பெற்றது. வீட்டைப் ப்பற்றி பேசும் பிரிவாக, நான்காவது பால் ஒன்று இல்லை. வள்ளுவர் நான்கிடங்களில் மறு உலகத்தைக் குறிப்பிடுகிருர் அக்குறட்பாக்கள் வருமாறு,

இருமை வகை தெரிந்து ஈண்டு அறம் பூண்டார்
பெருமை பிறங்கிற்று உலகு —குறள், 23

சிறுமையுள் நீங்கிய இன்சொல் மறுமையும்
இம்மையும் இன்பம் தரும் —குறள் 98

மன நலத்தின் ஆகும் மறுமை மற்று அஃதும்
இன நலத்தின் ஏமாப்பு உடைத்து —குறள், 459

இன்மை என ஒரு பாவி மறுமையும்
இம்மையும் இன்றி வரும் —குறள், 1042

1.2. வள்ளுவர், வீட்டைப் பற்றிப் பதினன்கு இடங்களிலும், அவற்றைப் பற்றி ஐந்திடங்களிலும் குறிப்பிடுகிருர். அக்குறள் வெண்பாக்கள் வருமாறு.

உரன் என்றும் தோட்டியாள் ஓர் ஐந்தும் காப்பாள்
வரன் என்றும் வைப்பிற்கு ஓர் வித்து — குறள், 24

சிறப்பு ஈனும் செல்வமும் ஈனும் அறத்தினூ உங்கு
ஆக்கம் எவனே உயிர்க்கு — குறள், 31

பெற்ருன் பெறின் பெறுவர் பெண்டிர் பெருஞ்சிறப்புப்
புத்தேளிர் வாழும் உலகு —குறள், 58

செல் விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்து இருப்பான்
நல்விருந்து வானத்தவர்க்கு - குறள், 86

செய்யாமல் செய்த உதவிக்கு வையகமும்
வானகமும் ஆற்றல் அரிது —குறள், 101

அடக்கம் அமரருள் உய்க்கும்......
அமரருள்—தேவர் உலகத்து குறள், 121

புத்தேள் உலகத்தும் ஈண்டும் பெறல் அரிதே
ஒப்புரவின் நல்ல பிற —குறள், 213

கள்வார்க்குத் தள்ளும் உயிர் நிலை கள்ளார்க்குத்
தள்ளாது புத்தேள் உலகு —குறள், 280

யான் எனது என்னும் செருக்கு அறுப்பான் வானோர்க்கு
உயர்ந்த உலகம் புகும் -- குறள், 346

இருள் நீங்கி இன்பம் பயக்கும் மருள் நீங்கி
மாசறு காட்சி யவர்க்கு —குறள், 352

ஐயத்தின் நீங்கித் தெளிந்தார்க்கு வையத்தின்
வானம் நணியது உடைத்து —குறள், 353

மற்று ஈண்டு வாரா நெறி —குறள், 356

பேர்த்து உள்ள வேண்டா பிறப்பு —குறள், 357

பிறப்பு என்னும் பேதைமை நீங்கச் சிறப்பு என்னும்
செம்பொருள் காண்பதறிவு —குறள், 358

இனி நிரயத்தைப் பற்றிக் கூறும் இடங்கள் வருமாறு :

அருள் சேர்ந்த நெஞ்சினார்க்கு இல்லை இருள் சேர்ந்த
இன்னா உலகம் புகல் —குறள், 243

உண்ணாமை உள்ளது உயிர்நிலை ஊன் உண்ண
அண்ணாத்தல் செய்யாது அளறு —குறள், 255

மனையாளை அஞ்சும் மறுமையிலாளன்
வினையாண்மை வீறு எய்தல் இன்று —குறள், 904

வரைவு இலா மாண் இழையார் மென்தோள் புரை இலாப்
பூரியர்கள் ஆழும் அளறு - குறள், 919

அகடு ஆரார் அல்லல் உழப்பர் சூது என்னும்
முகடியான் மூடப்பட்டார் —குறள், 936

1. 3 அக நானூற்றில் மறு உலகம் அல்லது பேரின்பத்தைப் பற்றிய ஒரு குறிப்புத் தென்படுகிறது. இம்மை உலகத்து இடை

யொடும் விளங்கி மறுமை உலகமும் மறுவின்றி எய்துப—களிற்றி
யானை, 66, அடிகள், 1—2.

பரிபாடல் கூறுவதாவது :

அறத்துச் சேராச் சீரில்லோரும்
மறு பிறப்பு இல் என்னும் மடவாரும்
— பரி, 5, அடி 74—

சிலம்பும் மறுமையைப் பற்றிப் பேசும்,

சிந்தை செல்லாச் சேண் நெடுந்தூரத்து அந்தமில் இன்பத்து அரசாள் வேந்தன் என்று சிலம்பு, வரந்தருகாதை, [அடிகள் 181-182] செல்லும் தேயத்துக்கு உறுதுணை தேடுமின் — அடி 201.

ஏனைய நூல்களிலுள்ள குறிப்புக்கள் வருமாறு !

வாராச் சேட்புலம் படர்ந்தோன் — பதிற்றுப் பத்து, ஏழாம் பத்து, அடி 10

இசையும் இன்பமும் ஈதலும் மூன்றும்
அசையுடன் இருந்தோர்க்கு அரும் புணர்வு இன்மென
வினைவயின் பிரிந்த வேறுபடு கொள்கை — நற்றிணை, 214, அடிகள்1—3

உலையாவீடு — மணிமேகலை, 30, அடி 3

1. 4 திருவள்ளுவமாலையில் உள்ள செய்யுட்கள் 4 ம், 47–ம், திருக்குறள் மூன்று உறுதிப் பொருட்களைப் பற்றி மட்டும் கூறுகிறதெனவும், செய்யுட்கள் 7, 8, 19, 22, 33, 38, 40, 44, 50 ஆகிய ஒன்பது செய்யுட்களும், திருவள்ளுவர் 'முப்பாலின் நாற்பால் மொழிந்தவர்' எனவும் கூறுகின்றன. இவற்றுள் எக்கருத்தைக் கொள்வது என்ற வினா எழுகிறது. மிகைபடக் கூறல் கவிஞர் களுக்கு இயல்பாதலாலும், நான்கு உறுதிப் பொருட்களைப் பற்றி யும் பாடினால் மட்டுமே எவர் ஒருவரும் கவிஞராக எண்ணப்படுவார் என்ற எண்ணத்தினால் உந்தப்பட்டு அவ்வாறு கூறியிருக்கலாம். ஆனால் அவர்கள் கருத்து ஏற்புடைத்தன்று. 'வீடு என்பது சிந்தை யும் மொழியும் செல்லா நிலைமைத்தாகலின், துறவறமாகிய காரணவகையால் கூறப்படுவதல்லது. இலக்கண வகையால் கூறப் படா மயின் நூல்களுள் கூறப்படுவன ஏனை மூன்றுமேயாம்" என்ற பரிமேலழகர் முடிவே கொள்ளத்தக்கது.

2. வள்ளுவர் தேவனா அல்லது மனிதனா என்ற வினாவை லர் எழுப்புகின்றனர். திருவள்ளுவ மாலையில் உள்ள 2, 4, 28

ஆம் செய்யுட்கள் வள்ளுவரைப் பிரமன் என்றும், செய்யுட்கள் 8,19,39, ஆகியவை அவரை முறையே தேவு, தெய்வம், தேவு என்றும் போற்றுகின்றன. பல அறிஞர்கள் வள்ளுவரை ஒரு பெரியாராகக் (மகான்) கருதுகின்றனர். இக்காரணம் பற்றியே அவரை நாயனார் என அழைக்கின்றனர். உலகத்தைப் பற்றியும் இதில் வாழும் மக்களைப் பற்றியும் சிறப்ப வள்ளுவர் அறிந்திருந்ததால், அவருடைய அறிவு தெய்வத்தின் அறிவுடன் ஒப்புமை கூறப் படுகிறது. வள்ளுவர் மனிதரே என்பதில் ஐயமில்லை. இந்நில வுலகில் ஒரு பரிபூரண மனிதரைப் பார்க்கக் கூடுமானால், அவர் வள்ளுவராகத்தான் இருக்க முடியும். இந்நோக்கு வடமொழியில் தரும சூத்திரங்களை எழுதிய ஆசிரியர்கள் தங்களைச் சாதாரண மனிதர்கள் என்றே கூறிக்கொள்வதும் ஒப்புநோக்கத்தக்கது. விஷ்ணு சிமிருதி அல்லது விஷ்ணு தர்ம சூத்திரம் இவ்விதிக்குப் புறனடையாகும்.

3. அடுத்து, மூன்று பொருட்களில் எதற்கு முதன்மை தருவது என்ற வினா எழுகிறது. திருவள்ளுவரும் ஏனைய புலவர்களும் அறத்துக்கே முதலிடம் அளித்தனர். இக்கால ஆசிரியர்கள் இன்பத்துக்கே முதலிடம் தருகின்றனர். இன்பத்தைப் பெறுவதற்கு ஒருவருக்குப் போதிய செல்வம் வேண்டும். ஆனால் செல்வத்தை நெறியில் ஈட்ட வேண்டும். ஆகவே அறம் அடித்தளம் ஆகிறது. இக்கருத்தில் குற்றம் காணமுடியாது, "இல்லறத்தின் வழிப் படுவனவாய பொருள் இன்பங்களுள் இருமையும் பயப்பதாய பொருள் கூறுவான் எடுத்துக்கொண்டார்" என்ற பரிமேலழகரின் கூற்று சிறந்ததாகப் புலப்படுகிறது இம்முடிவையே நாலடியும் இரண்டு வெண்பாக்களில் கூறுகிறது.

வடுவிலா வையத்து மன்னிய மூன்றில்
நடுவண தெய்த இருதலையும் எய்தும்
நடுவண தெய்தாதான் எய்தும் உலைப் பெய்து
அடுவது போலும் துயர் —நாலடி 114

கரும்மும் உள்படாப் போகமும் துவ்வாத்
தருமமும் தக்கார்க்கே செய்யா—ஒரு நிலையே
முட்டின்றி மூன்றும் முடியுமேல் அஃது ஒருவன்
பட்டினம் பெற்ற கலம் —நாலடி, 250

---

3 Rao Bahadur K.V R ngaswami Aiyangar, Aspects of Ancient Indian Economic thought 1927 Printed in 1934. Madras Law Journal Press P. 14

தலையாயார் யார், இடையாயார் யார், கடையாயார் யார் என்பதைப் பற்றி நாலடியும், சிறுபஞ்சமூலமும் வெவ்வேறு வரிசையாக உரைக்கின்றன.

கல்லாக் கழிப்பர் தலையாயார் ; நல்லவை
துவ்வாக் கழிப்பர் இடைகள் ; கடைகள்
இனிது உள்ளோம் ஆரப்பெறேம் யாம் என்றும்
முனிவினால் கண்பாடிலர் —நாலடி, 366

தலையே தவம் முயன்று வாழ்தல், ஒருவர்க்கு
இடையே இனியார் கண் தங்கல்—கடையே
புணராது என்று எண்ணிப் பொருள் நசையால் தம்மை
உணரார் பின் மூன்று நிலை —நாலடி 365

நாலடியார் துறவறத்தை வலியுறுத்தும் நூலாக இருந்தும், மனை வாழ்க்கையினின்று நல்லவற்றை நுகர்ந்தே மறுமைக்கு உறுதி என்று துறப்பர் இடையாய அறிவுடையார் (பதுமனார்) என்றும், இல்லத்தில் இருந்து போகத்தைத் துய்ப்பவர் இடையாயார் உற்ற அளவிலாவது கூறுவதே பாராட்டத்தக்கது.

இனி சிறுபஞ்சமூலம் கூறுவதாவது :

தத்தம் மெய்ஞ்ஞானம் தருக்கம் சமயமே
வித்தகர் கண்ட வீடு உள்ளிட்டு ஆங்கு—அத்தகத்து
அந்தம் இவ்வைந்தும் அறிவான் தலையாய
சிந்திப்பின் சிட்டன் சிறந்து —சிறுபஞ்சமூலம் 86

தத்தம் இலக்கண நூல், சிட்டன்—மேலானவன்

கண்ணுங்கால் கண்ணும் கணிதமே யாழினொடு
எண்ணுங்கால் சாந்தே இலை நறுக்கிட்டு – எண்ணுதல்
இட்ட இவ்வைந்தும் அறிவான் இடையாய
சிட்டன் என்று எண்ணப்படும் —87

நாணிலனாய் நன்கு நல்லாறாய்ப் பெரியார்ப்
பேணிலனாய் பிறர் சேவகனாய் ஏணிப்
பொருந்திய பூண் முலையார் சேரி கைத்து இல்லான்
பருத்தி பகர்வுழி நாய் —88.

துறவிகள் அல்லது ஞானிகள் தலையாயார் என்பதும், இல்லறத்தார்கள் இடையாயார் என்பதும், பொறாமை, பேராசை உடையவர்களும், நாணம் இல்லாதவர்களும், பெரியரைப். பேணாதவர்களும்,விலைமாதரைச் சேர்பவர்களும் கடையாயார் என்பதும் மேலே காட்டிய ஐந்து செய்யுட்களின் பிண்டப் பொருளாகும். கடையாயார் யார் என்பதில் கருத்து மாறுபாடு இல்லை. ஆனால் இல்லறத்தார்

இடையாயார் எனக் கூறுதல் பொருந்தாது. ஏனெனில் அவர்கள் இல்லையேல் துறவியரும் இல்லை. பதினென் கீழ்க்கணக்கு நூல்களில் இல்லறத்துக்கு மிகவும் ஏற்றந் தருவது திருக்குறளேயாம். இவ்வரிசையில் பின்வந்த பதினேழு நூல்களும் பிற்காலத்தன. அவற்றின் கருத்துக்களும் அத்துணைச் சிறப்புடையனவாகத் தெரியவில்லை. திருக்குறள் பொருளுக்கே முதன்மை தருகிறது. பொருளில் அரசியலும் அடங்கும். 1330 குறட்பாக்களில் 700 பொருட்பாவில் உள்ளன.

3.1 இனி அறம், பொருள் இன்பங்களின் விளக்கங்களைக் காண்போம். "அறமாவது மனு முதலிய நூல்களில் விதித்தன செய்தலும், விலக்கியன ஒழிதலுமாம்'' என்பது பரிமேலழகர் கூற்று. மனுவைப் பற்றிய குறிப்பை நீக்கிவிட்டால் இவ்விளக்கம் ஏற்புடைத்தாயிருக்கும். (மனுவைப் பற்றிய குறிப்பைப் பிற்சேர்க்கையில் காண்க.) அறம் அல்லது தருமம் என்னும் சொல்லுக்கு இரண்டு விளக்கங்கள் அளிக்கப்படுகின்றன. 'அறம்' என்றால் 'கடமை' என்று பொதுவாகக் கொள்ளப்படுகிறது. இது மிகவும் குறுகிய விளக்கமாகும். சைமினி என்பார் தந்த விளக்கம் மிகச் சிறந்ததாகப்படுகிறது. அவர் கருத்துப்படி நல்லனவற்றைச் செய் எனக் கூறும் ஆணைகளே தருமமாகும். மனிதர்கள் தனிப்பட்டவர்கள் என்ற நிலையிலும், சமுதாயத்தின் உறுப்பினர்கள் என்ற நிலையிலும் அவர்கள் ஆற்றவேண்டிய செயல்களைப்பற்றிய ஆணைகளே இவையாகும்.'' இந்த விளக்கத்துக்கும், அறத்தைப் பற்றிப் பரிமேலழகர் அளித்த விளக்கத்துக்கும் இடையில் பெருத்த ஒற்றுமை காணக்கிடக்கிறது.

> செயற்பால தோரும் அறனே, ஒருவற்கு
> உயற்பால தோரும் பழி — குறள், 30

> அறவினையும், ஆன்ற பொருளும், பிறவினையும்
> பெண்ஏவல் செய்வார் கண் இல் — குறள், 909

அறன் என்றால் நல்வினை என்றும், அறவினை என்றால் அறச்செயல் என்றுமே இவ்விரண்டு குறட்களிலும் பரிமேலழகர் பொருள் கொண்டார். இவ்விளக்கம் அறிவுக்கு இசைவதே 'அறச்செயல்' என்றால் பொதுவாக 'நல்ல செயல்' எனலாம். சிந்தனையைக காட்டிலும் செயலுக்குச் சிறப்புத் தந்தது போற்றற்குரியது.

3.2 இக்காலத்தில் 'செல்வம்' என்றால் அங்காடியில் விற்கப்படும் பண்டங்களைச் சுட்டும், ஈண்டு 'பொருள்' எனப்படுவது ஐம்பொறிகளால் நுகரக் கூடிய பண்டங்களை மட்டுமன்றி வேறொன்றையும் சுட்டும். அதுதான் அரசு நெறி. அரசு நெறி

அரசு நீதி எனவும் வழங்கும். இனி இல்லறத்தின் வழிப்படுவனவாய பொருள் இன்பங்களுள் இருமையும் பயப்பதாய பொருள் கூறுவான் எடுத்துக்கொண்டார். அது தன்றுணைக் காரணமாய அரசநீதி கூறவே அடங்கும். அரசனீதியாவது காவலை நடாத்து முறைமை' என்பர் பரிமேலகழர். குடிமக்கள் எங்ஙனம் புரக்கப்பட்டனர் என்பது அரசு நெறியில் அடங்கும். அறம், பொருள், இன்பம், வீடு என்பவை வடமொழியில் தருமம், அருத்தம், காமம், மோக்கம் (மோக்ஷம்) என வழங்கும். சிலர் 'அருத்தம்' என்பதை 'வார்த்தை' (வார்த்தா) எனக் கொள்கின்றனர். வார்த்தையில் வேளாண்மையும், வாணிகமும், ஆவோம்பலும் அடங்கும். வடநூல்கள் இம்மூன்றனுள் ஆவோம்பலுக்கு மிக முக்கியத்துவம் அளித்தன.[3] தமிழ் நூல்களில் கலித்தொகை ஆவோம்பலுக்குக் கூடுதலான சிறப்பை அளிக்கிறது. 'வார்த்தா' என்ற வடசொல் 'விருத்தி' என்ற சொல்லிலிருந்து முகிழ்த்ததாகும். விருத்தி என்னும் சொல் பொருள் தேடும் அனைத்து பணிகளையும் (professions) சுட்டும். இச்சொல் குறுகிய பொருளில் 'தொழிலையும்' விரிந்த பொருளில் அறிவைப் பற்றிய அறிவியல் அல்லது பிரிவுகளையும் ("science or branches" of knowledge) குறிக்கும். இப்பிரிவுகள் பல தொழில்களைப் பற்றிக் கூறுகின்றன. 'வார்த்தை' நான்கு பிரிவுகளையுடையது என்றும், அவற்றில் கடன் கொடுத்தலும் அடங்கும் என்றும் சுக்கிர நீதி கூறும்.[4]

3.3. "இன்பம் என்றது ஒரு காலத்து ஒரு பொருளான் ஐம் புலனும் நுகர்தற் சிறப்புடைத்தாய காம இன்பத்தினை. இச்சிறப்புப் பற்றி வடநூலும் போசராசனும்சுவை பலவென்று கூறுவார் கூறுக; யாம் கூறுவது இன்பச் சுவை ஒன்றனையுமே என இதனையே மிகுத்துக் கூறினான்" (பரிமேலழகர்), திருவள்ளுவரும் ஏனைய புலவர்களும் உறுதிப் பொருட்கள் மூன்றனுள் அறத்தைத் தலை யாகவும், பொருளையும், இன்பத்தையும் அதற்கடுத்த நிலையிலும் வைத்தனர். இம்மையில் மட்டும் நுகரப்படுவது இன்பம்; ஆனால் இம்மையிலும், மறுமையிலும் நலன் அளிப்பது அறமும் பொருளும் என்பது இதற்குக் காரணமாக இருக்கலாம். பொருளும், இன்பமும் அறத்தையே அடித்தளமாகக் கொண்டிருக்கவேண்டும் என்பது பற்றி அறத்திற்கு அவர்கள் முதன்மை அளித்திருக்கலாம். மனிதர் அனைத்துப் பண்டங்களினின்றும் பயன்பாட்டைத் துய்த்தாலும், நற்பண்புடைய மனைவியோடு இல்லறம் நடத்துவதி னின்றும் பெறும் இன்பமே பேரின்பமாகும். அதாவது ஏனைய பண்டங்களினின்றும் கிடைக்கும் இன்பம், பென்பால் கிடைக்கும் இன்பத்தைப் பன்மடங்கு பெருக்குவதற்குத் துணை செய்கிறது.

4 அதே நூல், ப. 36

வடமொழி, தமிழ்மொழி ஆகிய இருமொழிகளிலும் உள்ள முற்கால, இக்காலப் புலவர்களின் ஒருமித்த கருத்தும் இதுவே. நமக்கும் இக்கருத்து உடன்பாடே.

பிற்சேர்க்கை

1. தொல்காப்பிய உரையாசிரியர்களின் கருத்து

அறனும், பொருளும், இன்பமும் என்னாது, இன்பமும் பொருளும், அறனும் என்றது என்னையெனின், பலவகை உயிர்கட்கும் வரும் இன்பம் இருவகைப்படும். அவையாவன போகம் நுகர்தலும், வீடு பெறுதலும் என. அவற்றுள் வீடு பேறு துறவறத்தில் நின்றார்க்கல்லது எய்தல் அரிதாயிற்று. போக நுகர்தல் மனையறத்தார்க் எய்துவது. அவர் எய்தும் இன்பமும், அவ்வின்பத்திற்குக் காரணமாய பொருளும், அப்பொருட்குக் காரண மாய அறனும், எனக் காரியகாரணம் நோக்கி வைத்தார் என்க. (தொல்காப்பியம், பொருளதிகாரம், களவியல் 89). அறத்தினால் பொருளாக்கி அப்பொருளால் இன்பம் நுகர்தல் சிறப்பானும், அதனால் இல்லறம் கூறலானும் இன்பம் முற்கூறினார். அறனும், இன்பமும் பொருளால் பெறப்படுதலின், அதனை இடைவைத்தார். போகமும் வீடும் என இரண்டும் சிறத்தலின் போகம் ஈண்டுக்கூறி வீடு பெறுவதற்குக் காரணம் முற்கூறினார் (நச்சினார்க்கினியர்)

இமையோர் தேஎத்தும் எறிகடல் வரைப்பினும்
அவையில் காலம் இன்மையான,

இதுவும் மேற் கூறப்பட்ட பொருள், பொருள் என்பது அறிவித்தலை நுதலிற்று. தேவர் உலகத்திலும், கடல் சூழ்ந்த உலகத்திலும் மேற் சொல்லப்பட்ட காலம் இன்மையால் உள் பொருள் என்றே கொள்ளப்படும் என்றவாறு (தொல்காப்பியம், பொருளதிகாரம், 244, இளம்பூரணம்) அவையில் காலம் இன்மையான—அறம், பொருள், இன்பங்களின் நுகர்வு இல்லாததோர் காலம் இன்றாகையால், அவற்றைப் பொருள் என்றே கொள்க. (நச்சினார்க்கினியர், பொருளதிகாரம் 248 .

2. வடநூல் வழக்கும் தமிழ் வழக்கும்

'இவர் (திருவள்ளுவர்) பொருட்பாகுபாட்டினை அறம் பொருள் இன்பமென வடநூல் வழக்குப் பற்றி ஓதுதலான்' என்று பரிமேலழகர் கூறுவர். இக்கருத்து பரிப்பெருமாளுக்கு உடன்பாடே. 'தமிழ் நடையாயின் அகம்புறமென்று கூறுதல் வேண்டும்' என்பது பரிப்பெருமாள் கூற்று[4] புறத்தில் பொருளும், அறமும் அடங்கும்.

---

4 திரு கு. சிவஞானம், எம். ஏ.. — தமிழ்ப்பொழில் மலர் 12 துணர் 53 ப. 198, 1980, மார்ச், ஏப்ரல் சித்தார்த்தி, பங்குனி)

3. தரும சாத்திரங்களும் தரும சூத்திரங்களும்

1. இந்து தருமத்தைப் பற்றிய கூற்றுக்களைக் கொண்டவை தருமசூத்திரங்கள் தருமசூத்திரங்கள் முற்றும் செய்யுள் வடிவின. தருமசூத்திரங்கள் பெரும்பகுப்பு -உரைநடை நூல்கள் (சில செய்யுட்கள் விரவியுள்ளன). இந்நூல்களைத் தொகுத்தவர்களும் இவற்றின் உரையாசிரியர்களும் புராணங்களைத் குறிப்பிடு கின்றனர். 2. தருமசூத்திரங்களில் வழக்கிழந்த பல சொற்கள் உள்ளன. 3. விட்டுணு (விஷ்ணு) சிமிருதி ஒன்றைத் தவிர ஏனைய தரும சூத்திரங்களை இயற்றியோர் தங்களை இறைவன் என்று கூறிக்கொள்ளவில்லை மனு சம்கிதையைப் போன்ற பழைய தரும சாத்திரங்கள் இறைவனால் யாக்கப்பட்டன என்று கூறப் படுகிறது. பிரமன்தான் மனுதரும சாத்திரத்தைப் படைத்தார் என்று இயம்புகிறார்கள். 4. தரும சூத்திரங்களில் தலைப்புக்களை வகுப்பதில் எவ்விதமான பாகுபாட்டு முறையும் காணப்படவில்லை. ஆனால் தரும சாத்திரங்களில், பிரிவுகளுக்குத் தனித்தனியே தலைப்புகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. எடுத்துக்காட்டாக யாக்யவல்கியர் சம்கிதையில் மூன்று பெருந்தலைப்புகள் உள்ளன. அவையாவன, ஒழுக்கம் (ஆசாரம்), கழுவாய் (பிராயச் சித்தம்), வழக்கு (வியவகாரம்) 4 வரலாற்று முறையில் நோக்கும் பொழுது, பொதுவாக தரும சூத்திரங்கள், தரும சாத்திரங்களுக்கு முன்பு தோன்றின. 5) தரும சூத்திரங்கள் வேதங்களுடன் தொடர்புடையன. இவற்றில் பல குறிப்பிட்ட வேதங்களையோ அல்லது வேத நெறி பிறரையோ பாராட்டு கின்றன.[5] 6) பாணினியின் நூற்பாக்களைப் போன்று தரும சூத்திரங்கள் அத்துணை சுருங்கியனவ அல்ல. பாணினியில் ஒரு நீண்ட இலக்கண விதியில் 26 சொற்கள் உள்ளன. இம்மாதிரியான தரும சூத்திரங்களில் நிரம்ப உள்ளன. சில வாக்கியங்கள் அச் சேறிய) அளரப்பக்கத்துக்கு மேலும் செல்லுகின்றன. சில புற நடைகளைத் தவிர்த்து அவை பெரும்பாலும் பாணினியின் விதி களுக்கு உட்பட்ட வடமொழியில் (Classical Sanskrit) எழுதப் பட்டுள்ளன.

பல்வேறு வகைப்பட்ட சூத்திரங்கள் எழுதப்பட்டன. இவற்றுள் கல்ப சூத்திரங்கள் இந்தியப் பண்பாட்டின் வரலாற்றினை அறியத் துணை செய்யும். அவை கல்பம் அல்லது சடங்கைப்பற்றிக் கூறுகின்றன. இவற்றில் வேத வேள்விகளும், வீட்டுச் சடங்கு களும், வழக்காற்றில் உள்ள விதிகளும் (customary law) அடங்கும்.

---

5. Dr. S. C. Banerji, Dharma Sastras, P. 2, punthiPustak Calcutta—4, 1962

கல்ப சூத்திரங்களில் சிஹெௌத, கிருகிய, தரும சூத்திரங்கள் அடங்கும். பெரு வேள்விகளான சிஹெௌதயக்ரும் முதலானவற்றைப் பற்றிச் சிஹெௌத சூத்திரங்கள் கூறும். திருமணம் முதலாய வீட்டில் நடக்கும் சடங்குகளைப் பற்றிய நூல்கள் கிருகிய சூத்திரங்கள், தரும சூத்திரங்கள் வருண தருமம், ஆசிரம தருமம், நைத்திக தருமம் (எப்போதாயினும் ஆற்றவேண்டிய சிறப்புக் கடமைகள்) ஆகிய மூன்றனைப் பற்றிக் கூறும்.[6]

4. மனு

முயற்சியால் ஒருவன் முன்னுக்கு வர இயலும் என்பதை மனு வலியுறுத்துகிறார் ஒவ்வொரு ஆன்மாவும் இறைவனின் ஒரு நுண் கூறு. தூய்மையானவனாகவும், இனிய சொற்களைப் பேசு பவனாகவும், ஆணவமின்றியும் ஒழுக்கமுடைய பிராமணர் களுடனும் சேர்ந்து வாழும் சூத்திரர்களுக்கு உயர்நிலை அளிக்கப் படல் வேண்டும்.

ஒன்பதாம் அதிகாரத்தின் பெரும் பகுதியும் மிகுந்த காழ்ப் புணர்ச்சியுடன் எழுதப்பட்டிருக்கிறது. இப்பகுதியில் காணப்படும் கருத்துக்கள் மனுவின் கண்ணோட்டத்திற்கு பெரிதும் மாறுபட்டு உள்ளன.[7] இந்நூலில் பிற்காலத்தில் இடைச் செருகல்கள் ஏறின என்பது தெளிவு. ஒருவனை ஒழுக்கமுடையான் என்று மதிப்பிட வேண்டுமேயன்றி அவனுடைய பிறப்பைக் கொண்டு அல்ல. தற்செயலாக நிகழும் பிறப்பைக் காட்டிலும் ஒழுக்கமே மிகவும் சிறப்பு வாய்ந்தது.[8] ஆர்கலி உலகத்து மக்கட் கெல்லாம் ஓதலிற் சிறந்தன்று ஒழுக்கமுடைமை எனவரூஉம் முதுமொழிக்காஞ்சி அடி களுடன் இதனை ஒப்பிடுக.

பிற்சேர்க்கை

5) இல்லறத்தின் சிறப்பு

அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது —குறள், 45

அறத்தாற்றின் இல்வாழ்க்கை ஆற்றின் புறத்தாற்றின்
போஒய்ப் பெறுவது எவன் —குறள், 46

---

6. Ram Gopal, India of Vedic Kalpasutras P. 2, national Publishing House, Dary samy, Delhi, 1955.
7. Manu Dharma Sastri, P. gon, Kewal Motwani 1965, Ganesh & co., (Madras) Private Ltd., Madras—17.
8. அதே நூல், ப. 105.

ஆற்றின் ஒழுக்கி அறன் இழுக்கா இல்வாழ்க்கை —
குறள், 48

அறன் எனப்பட்டதே இல் வாழ்க்கை —குறள், 49

6) ஏனைய நூல்கள்

பரிபாடல் முதலான நூல்களும் முப்பொருளை வலியுறுத்து கின்றன. ... ... யாஅம் இரப்பவை.

பொருளும் பொன்னும் போகமும் அல்ல, நின்பால் அருளும் அன்பும் அறனும் மூன்றும் ... பரிபாடல், 5, அடிகள் 78—80

அறநெறி முதற்றே அரசின் கொற்றம்—புறம், 55, அடி 10

அறம் சாரான் மூப்பே போல் — கலித்தொகை, குறிஞ்சிக்கலி, 2 (38), அடி 19

அறத்துறை விளங்கிய அறவோர் பள்ளியும் — சிலம்பு, ஊர் காண் காதை அடி 11

பெண்டிரும் உண்டியும் இன்பம் என்று உலகில்—இன்பத்தையும், பொருளையும் ஆகுபெயரால் பெண்டிரும் உண்டியும் என்றார்—சிலம்பு, ஊர் காண் காதை, அடி 39, அடியார்க்கு நல்லார் உரை.

நிறைவுறை

இதுகாறும் கூறியவற்றால் 1) அறம், பொருள், இன்பம் என உறுதிப் பொருட்கள் மூன்றே என்பதும், 2) இவை தரும சூத்திரங் களுக்கும் உடன்பாடு என்பதும், அவை வீட்டைப்பற்றி ஒன்றுமே கூறவில்லை என்பதும், 3) உலகம் தொடங்கிய காலம் தொட்டு இம்மூன்றும் உள்ளன. (இளம்பூரணர்) என்பதும், 4) இம்மூன்றை யும் பொருள் என்றே கொள்ளலாம் என்பதும் (நச்சினார்க்கினியர்), 5) போக நுகர்தல் (இன்பம்) இல்லறத்தார்க்கே உரியன என்பதும் (பரிமேலழகர், இளம்பூரணர், நச்சினார்க்கினியர்), 6) பொருள் இல்லறத்தின் வழிபடுவதானதால் இல்லறத்தார்க்கே உரியது என்பதும் (பரிமேலழகர்), 7) வடநூல் வழக்குப்பற்றி அறம், பொருள், இன்பம் என்று பாகுபாடு செய்யப்பட்டது என்பதும் (பரிமேலழகர், பரிப்பெருமாள்), 8) தமிழ்வழக்கப்படி அகம், புறம் என்றே இவற்றைப் பாகுபாடு செய்ய வேண்டும் என்பதும் (பரிப்பெருமாள்), 9) அகத்திற்கும், புறத்திற்கும், தாழ்வு கற்பிக்கக் கூடாது என்பதும், அவையிரண்டும் சமமாக மதிக்கப்பட வேண்டும்

(தொடர்ச்சி 378-ம் பக்கம்)

இராஜேந்திர சோழனின் சோழ கங்கம்

இராஜ் பவுன்துரை,
தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சை.

சோழப்பேரரசன் இராஜராஜ சோழனின் ஆற்றல் மிக்க புதல்வன், முதலாம் இராஜேந்திர சோழன் இராஜேந்திரசோழன் தன் இளவயதிலேயே 9,00,000 வீரர்களுக்குத் தலைமை தாங்கிப் பல வெற்றிகளைக் குவித்தவன் ; பரகேசரி என்னும்பட்டம் பெற்றவன். கங்கை வெற்றியைச் சிறப்பிக்கும் வண்ணம் "கங்கை கொண்ட சோழபுரம்" எனத்தலைநகருக்குப்பெயரிட்டான்.

ஜெயஸ்தம்பம்

இராஜேந்திரசோழனின் கங்கைவெற்றி ஒரு மாபெரும் வெற்றியாக அமைந்தது. அவனது தானைத் தலைவர்கள் கங்கையாற்றிலிருந்து புனிதநீரை வெற்றிச்சின்னமாக எடுத்து வந்தனர். அங்கிருந்து கொண்டுவந்த கங்கைநீரை கங்கை கொண்ட சோழபுரத்தில் கொண்டுவந்து 'சோழகங்கம்'என்ற மிகப்பெரிய ஏரியைத் தோற்றுவித்து அதில் ஊற்றி அதனை ஒரு ஜலமயமான வெற்றிச் சின்னமாக (ஜெயஸ்தம்பம்)நிறுவினான். இந்தியாவில் மிகப்பெரிய ஏரிகளில் ஒன்றாக அமைந்த அந்த ஏரிக்கு 'சோழ கங்கம்' எனப் பெயரிட்டான் வேள்வித்தூண் அமைத்தலும் யூபத்தூண் நாட்டுதலும் பற்றிய இலக்கியச் செய்திகள் உள்ளன.ஆனால் நீர்மயமான வெற்றித் தூணை அமைத்தவன் இராஜேந்திர சோழன் ஒருவனே ;

சோழகங்கம் :

சோழ கங்கம் அமைக்கப்பட்டதை திருவாலங்காட்டுச்செப்பேடு கூறுகின்றது. இராஜேந்திர சோழன் தன் படைகளைவடநாட்டிற்கு அனுப்பியதன் நோக்கமே கங்கை நீரைக்கொணர்ந்து தனது தலைநகரையும் கோயிலையும் தூய்மைப்படுத்தவே என்பர். இருப்பினும் இவ்வெற்றி மிகப்பெரிய வெற்றியாகப் போற்றப்படுகின்றது.

(முன் பக்கத் தொடர்ச்சி)

என்பதும், 10) இன்பத்திற்கே தொல்காப்பியர் முதலிடம் தந்திருப்பதாலும், மனை வாழ்வார்க்கே பொருளும், இன்பமும் உரியன என்பதாலும், திருக்குறளும் இன்பத்திற்கே முதலிடம் தந்துள்ளது என்று கொள்வதில் தவறில்லை என்பதும் (அறனோடு சார்ந்த பொருளும், அறனோடு சார்ந்த இன்பமும்) பெறப்படும்.

வெற்றிவாகை சூடிவரும் வழியில் திரைலோக்கி சிவன் கோவிலுக்குத் தங்கத்தால் ஆன தாமரை வைத்து வணங்கினான் என்பதை அறிகின்றோம். இங்கு காணப்படும்கல்வெட்டானது "இராஜேந்திர சோழன் கங்கைகொண்டு எழுந்தருளிநின்ற இடத்துத் திருவடி தொழுது" எனக்கூறும் செய்தியால் கங்கைநீர்கொண்டுவந்த செய்தி உறுதிப்படுகின்றது.

இராஜேந்திர சோழனின் தண்ட நாயகன் தான்வென்ற மாற்றரசர்களின் தலையில் (மைநீதயத் ஸபதிதண்ட நாயகஹ) கங்கையாற்றிலிருந்து தூய்மையான நீரை எடுத்துவரச்செய்து (கங்கா ஜலமயந் தேவஹ) [கங்கையாற்றிலிருந்து தூய்மையான நீரை எடுத்துவரச்செய்து (கங்கா ஜலமயந் தேவஹ)] தன் அரசனிடம் சேர்ப்பித்தான். அதை 'சோழ கங்கா' என்று கங்கையின் நீரால் ஜெயஸ்தம்பமாக இராஜேந்திரன் செய்தான்.

(கங்கா ஜலமயந் தேவஹ
ஜயஸ்தம்பம் வியதத்த ஸஹ)

எனத் திருவாலங்காட்டுச் செப்பேட்டுச் செய்தியாலும் உறுதிப்படுகின்றது.

'விக்ரமாங்க தேவ சரிதம்' எனும் வடமொழி நூல் சாளுக்கிய மன்னன் விக்ரமாதித்தன் மீது பாடப் பெற்றது. அந்நூலில் கங்கை கொண்ட சோழபுரத்தை 'கங்கா குண்டம்' எனக் குறிப்பிடுகின்றது. கங்கா குண்டம் என்பது சோழகங்கத்தைக் குறிப்பதாகக் கொள்ளலாம். 'குண்டம்' எனும் வடமொழிச் சொல் 'குழி' 'பள்ளம்' எனும் பொருள்படும். இங்கு கங்கை நீரை கொண்டு வந்து புதிய ஏரியை அமைத்து அதில் ஊற்றினான், என்பதால் இக்கூற்று சோழகங்கத்தின் சிறப்பைக் காட்டுவதாகவே அமைகின்றது. எனவே இராஜேந்திர சோழனின் மிகப்பெரிய படைப்பாக இச் சோழகங்கம் அமைந்திருந்தது என்பது தெளிவு.

பொன்னேரி :

சோழ கங்கம் இன்று தன் வரலாற்றுப் புகழ்மிக்க 'பொன்னேரி' என்று அழைக்கப்படுகின்றது. இது கங்கை கொண்ட சோழபுரத்திற்கு மேற்கே சயங்கொண்ட சேழாபுரம் செல்லும் பெருவழியில் 4 கி. மீ. தொலைவில் உள்ளது, இராஜேந்திர சோழனின் பெயர் சிறக்க விளங்கிய இவ்வேரியானது இன்று தூர்ந்த மேடாக உள்து.

தெற்கு வடக்காக 25. 6 கி. மீ நீளமுடைய ஏரியாக அமைந்திருக்கின்றது. இவ்வேரிக்கு கொள்ளிடத்திலிருந்து ஒரு கால்வாயும்,

வெள்ளாற்றிலிருந்து மற்றொரு கால்வாயும் நீர் கொண்டுவரப் பயன்படுத்தப்பட்டதாக அறிய முடிகின்றது வெள்ளாற்றிலிருந்து வடதிசையில் ஒரு கால்வாயும் தென்பகுதியில் சுமார் 100 கி. மீ. தூரத்திற்கு மற்றொரு கால்வாயும் கொண்டதாக அமைக்கப்பட்டிருந்தது என்பதை அறிய முடிகின்றது. இவ்வாறு அமைக்கப்பட்ட இந்த சோழ கங்கம் இந்தியாவில் காணப்படும் மிகப்பெரிய ஏரிகளில் ஒன்றாக விளங்கியது என ஆவணக் குறிப்புகள் காட்டுகின்றன.

1837–இல் பொன்னேரியை மீண்டும் பழைய முறையிலேயே அமைக்க முழுமுயற்சிகள் தோன்றியதாக அறிய முடிகின்றது. இப்பகுதியில் நீர் கொண்டு வருவதற்காக மேல் அணைத்திட்டம்(Upper Anicut) எனும் பெரும் திட்டம் சர் ஆர்தர் காட்டன் என்பவரால் திட்டமிடப்பட்டது பின்னர் இத்திட்டம் ஏனோ நிறைவு பெறாமலே சென்றுவிட்டதாகக் குறிப்பிடப்படுகின்றது. 1908-இல் மீண்டும் ஏரியைப் புதுப்பிக்கும் திட்டம் முயற்சிக்கப்பட்டது. ஆனால் இத்திட்டமும் நிறைவேறாமலே 1905-இல் ஒத்திப்போடப்பட்டதாக அறிய முடிகின்றது.

விவசாய மேம்பாட்டுத் திட்டங்கள்:

சோழர்களின் சிறந்த திட்டங்களில் மிகத் தலைமையானது நீர்ப்பாசன வசதி முறையாகும். நிலச் சீர்திருத்தங்களையும் மேற்கொண்டனர். நிலங்கள் நீர் நிலம், கொல்லை,காடு என்று மூன்று பிரிவாகப் பிரிக்கப்பட்டன. இவற்றில் நீர் நிலம், கொல்லை, என்பன முறையே 'நன்செய்' 'புன்செய்' என அழைக்கப்பட்டன என்பதை 'ஒலோகமா தேவீச்சு'வரக் கல்வெட்டினால் அறிய முடிகின்றது.

ஏரி, குளங்களிலுள்ள நிலை நீரையும், ஆற்று நீரையும் பாய்ச்சிக் கொள்ள நீர்ப்பாசன வரியும் வசூலிக்கப்பட்டதாக அறிகிறோம். "நீர் நிலைப் பாட்டம்", "ஒழுக்கு நீர்ப் பாட்டம்" என்பது பற்றி 'கழம்பந்தல்' கங்கை கொண்ட சோழீச்சரர் கோயில் கல்வெட்டு தெரிவிக்கின்றன. 'உழவிறை', எச்சோறு', 'கூற்று நெல்', 'வெட்டி', 'அமிஞ்சி' போன்ற வரிகள் பற்றியும் அறிய முடிகின்றது. சிறப்பாக 'ஏரிவாரியம்' அமைத்துச் செயல் பட்டமையைக் காணமுடிகின்றது. இது 'கலிங்கு வாரியம்' 'கழனி வாரியம்' என இருபெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டன. உத்தம சோழனின் 14-ஆம் ஆட்சியாண்டைச் சார்ந்த பரந்தூர்க் கல்வெட்டு (10-ஆம் நூற்றாண்டு) (ஏரிவாரியம் அமைக்கப்பட்ட செய்தியை:

"அபராஜித சதுர்வேதி மங்கலத்து
சபையோம் எம்மில் செய்த
சபை வாரியமும் ஏரி வாரியமும்"

எனக்கூறும் உத்திரமேரூர்க் கல்வெட்டிலும் "ஏரி வாரியம்" குறிக்கப் படுவதை நாம் அறிய முடிகின்றது. பொதுவாக நீர்ப்பாசனத்திற் குரிய எதையும் அழித்தல் பெரும் பாவமாகக் கருதப்பட்டது. இத் தீங்கைச் செய்தவர்க்குத் தண்டனை கொடுக்கப்பட்டது எனும் செய்தியை கல்வெட்டுகள் கூறுகின்றன. பல்லவர்கள் காலத்தில் நீர்ப்பாசன வசதிகள் அதிகம் மேற்கொள்ளப்பட்டன. பின்னர் இராஜேந்திரசோழனுடைய காலத்தில் இது மிகச்சிறந்த இடத்தைப் பெற்றது எனலாம். சோழர்களுடைய காலத்தில் காடுகளை அழித்து நாட்டை உண்டாக்கினர் எனும் இலக்கியக் குறிப்புகள் கிடைக்கின்றன. 'நாடு' என்பதற்கு தேசம், நிலம், எனும் பொருளைச் சுட்டுவதைவிட "நீர் நிலை நிறைந்த செழிப்பான விவசாய மக்கள் வாழும் பகுதி" எனும் பொருளில் கொள்வதே சிறப்பு. இவனது காலத்தில் இப்பணி சிறந்து அமைந்தது என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

சங்க காலப் பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் எனும் மன்னவனை குடபுலவியனார் எனும் புலவர்,

"உழவர்கட்குப் பணி நிலம் பெருக
நீர் நிலை பெருகும் நலத்தை
மன்னனே நல்க வேண்டும்
இது அவன் கடமை"

என்று கூறுகின்றார். எல்லாச் சிறப்புகளிலும் மிகச் சிறந்த புகழாக அமைவது ஒருவன் தன் நாட்டில் நீர் வளம் பெருகச் செய்வதே யாகும். இக்கூற்றுக்கு ஏற்ற மன்னனாக இராஜேந்திர சோழன் காணப்பட்டான் எனில் மிகையன்று.

அடிக்குறிப்புகள் :

1. திருவாலங்காட்டுச் செப்பேடு
2. S. I. I. Vol : III no. 205, verse 124.
3. நற்பனுவல் நால்வேதத்து
அருஞ்சீர்த்திப் பெருங்கண்ணுறை
நெய்ம்மலி யாவுதி பொங்கப் பன்மாண்
வீயாச் சிறப்பின் வேள்வி முற்றி
யூப நட்ட வியன்களம் பலகொல்—(புறம் :15 : 17-21)

4. "விஜிதைஹ ததீயதட பூமிநாயகைஹ
ஸலிலம் ததீயமத பாவனம் பரம்
நிஜ நாயகாய மதுராந்தகாய தத்
ஸமநீதயத் ஸபதி தண்ட நாயகஹ..."
சோழகங்கம் இதி க்யாத்யா
ப்ரதிதந் நிஜமண்டலே
கங்கா ஜலமயந் தேவஹ
ஜயஸ்தம்பம் வியதத்த ஸஹ

5. "This huge tank or lake, called Ponneri, was partly filled by a channel from the Coleroon, upwards of 60 miles in length, which entered it at its Southern end ; and partly by a smaller channel from the vettar, Which entered it on the north. Tra es of both these still remains."

The imperial Gazetteer of India, Vol. XII P. 129, 1908.

6. "It is provided with several substantial sluices, and in former times must have formed one of the largest reservoirs in india".

The Imperial Gazetteer of India, Vol. XII, P. 129, 1908.

7. M. J. Walhouse, MCs, in Ind. Ant. IV P. 274
8. H. E. Clerk's report on the Nandiyar Reservoir project, dated 29th, April 1903, P. 1.
9. H. E. Clerk's Preliminary Report on the investigation of Protective irrigation work (Madras-1902) P. I07
10. G. O. No. 838, Revenue, dated 2nd August 1904, P2
G. O. No. 443, irrigation, dated 8th May 1905, and connected papers.
11. AR 252 of 1952-53
12. உணவெனப்படுவது நிலத்தொடு நீரே
நீரும் நிலனும் புணரியோ ரீண்டு
உடம்பும் உயிரும் படைத்த சினோரே
... ...
நிலனெளி மருங்கின் நீர்நிலை பெருகத்
தட்டோரம்ம இவண் தட்டோரே
தள்ளா தோரிவண் தள்ளாதோரே !

—புறம் 18.

வண்ணகமும் அராகமும் ஒன்றா ?

புலவர். இரா. இராமமூர்த்தி, எம். ஏ., எம். எட்.,
ஔவையார் மகளிர் கல்லூரி, காரைக்கால்.

எழுத்து, சொல், பொருளெனத் தொல்காப்பியம் நுவலும் பொருளைப் பின்வந்த சான்றோர் எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணியென வகைப்படுத்தி ஐங் கூறாக்குவர். ஏனை எழுத்துச் சொல் பொருள் பற்றிய செய்திகளுள் இன்று வரை தொல்காப்பியம் குன்றாச் சிறப்பினை உடையதாக நின்று நிலவுமாப்போல யாப்பு, அணி ஆகியவற்றிலும் தனக்கெனத் தனித்த சிறப்பிற்றாய் விளங்குதல் மறுத்தற்கியலா உண்மையே. எனினும் பிற்காலத்தில் யாப்பறி புலவரும், மாணாக்கரும் யாப்பருங் கலத்தையும், யாப்பருங்கலக் காரிகையையுமே பெரிதும் பயிலா நிற்பர். பின்னர் வந்த யாப்பியல் நூல்கள் முதனூலாம் தொல்காப்பியத்தை நன்குணராமல் நெகிழ்வுற்ற இடங்கள் பல பிறழ உணர்ந்த இடங்களும் உள்ளன. அப்பிறழ்ச்சியே நிலைபேறெய்துவது விந்தையே யெனினும் அங்ஙனம் பிறழ்ந்த ஒன்று நிலைபேறெய்தியமையைச் சுட்டிக் காட்ட விழைவதே இக்கட்டுரையின் நோக்கம்.

சங்க காலத்திலேயே அருகியும், அதன் பின்னர்ப் பெரு வழக்கற்றுப்போயதுமான பாவகைகளுள் ஒன்று கலிப்பா. அக்கலிப்பாவின் வகைகளை.

"ஒத்தா ழிசைக்கலி கலிவெண் பாட்டே
கொச்சகம் உறழொடு கலிநால் வகைத்தே",

(தொல், செய் - 130)

எனத் தொல்காப்பியம் சுட்டும். மேற்கூறப்பட்ட ஒத்தாழிசைக் கலியும் இருவகைத்தாகும் என்பர். அவற்றுள் ஒன்று, இடைநிலைப் பாட்டாகிய தாழிசையும், தரவும், சுரிதகமும், தனிச்சொலுமென நான்கு உறுப்பாகப் பயின்று வரும் என்பர். இதனைப் பிற்கால யாப்பியலார், 'நேரிசை ஒத்தாழிசைக் கலி' யென வழங்குவர்.

ஏனை ஒன்றாகிய ஒத்தாழிசைக்கலி, 'வண்ணகம் ஒருபோகென இருவகைத்தே', என வகைப்படுத்துவர். அதனையடுத்து வண்ணக ஒத்தாழிசைக்கு இலக்கணம் கூறவந்த தொல்காப்பியர்,

'வண்ணகந் தானே
தரவே தாழிசை யெண்ணே வாரமென்
றந்நால் வகையிற் றோன்று மென்ப'

(—தொல், செய். 140)

என வகுத்துரைத்தார்.

இந்நூற்பாவுக்கு,[1] "வண்ணக ஒத்தாழிசையாவது தரவும், தாழிசையும், எண்ணும், சுரிதகமும் என்று சொல்லப்பட்ட நான்கு உறுப்பினையும் உடைத்து", என உரை வகுப்பர் இளம்பூரணர். அத்துடன், 'அராக மென்பது ஈரடியானும், பலவடியானும் குற்றெழுத்து நெருங்கிவரத் தொடுப்பது ; பெருமைக்கெல்லை ஆறடி', எனவும் குறிப்புரை வழங்குவர்.

பேராசிரியர்,[2] இந்நூற்பாவுக்குத்'தரவுந் தாழிசையும் எண்ணும் வாரமு மென்னும் உறுப்பு முறையானே வருவது வண்ணக ஒத்தாழிசையாம்" எனப் பொருளும், "வண்ணித்துப் புகழ்தலின் வண்ணக மெனப்படும்." என விளக்கவுரையும் வழங்குவர். "இனி வண்ணக மென்பது அராகமென உரைத்து, அவ்வுறுப்புடையன வண்ணக ஒத்தாழிசையெனவுஞ் சொல்லுவாருமுளர். எல்லா ஆசிரியருஞ் செய்த வழிநூற்கு இது முன்னூலாதலின் இவரொடு மாறுபடுதன் மரபன்றென மறுக்க," என மறுப்புரையும் வழங்குவர் பேராசிரியர்.

நச்சினார்க்கினியர்,[3] "வண்ணக ஒத்தாழிசை தான் தரவுந் தாழிசையும் எண்ணுறுப்பும் சுரிதகமுமென்றெண்ணிய நான்கு முறைமையாற்றேன்றும்" எனப்பொருளும், "[6] தரவினுல் தெய்வத்தை முன்னிலையாக நிறுத்தித்தாழிசையால் தெய்வத்தை வண்ணித்துப் புகழ்தலின் வண்ணகமாயிற்" றென விளக்கவுரையுந் தருவர்.

(தொடர்ச்சி அடுத்த இதழில்)

OFFICE OF THE CURATOR RECEIVED 1985

தமிழ்ப்பொழில் அன்பர்கள் அருள்நோக்கிற்கு

தமிழ்ப்பொழில் துணர் 57க்குரிய கையொப்பத்தொகையினைப் பல பொழில் அன்பர்கள் அனுப்பியருளவில்லை என்பதைக்கண்டு வருந்துகிறோம். ஆகலின் பொழில் அன்பர்கள் தமக்குள்ள பலபணிகளுக்கிடையே இதனையும் கருத்தில் கொண்டு பொழில் ஓராண்டு கையொப்பத்தொகை ரூ20/- இருபதையும் இதனையே நினைவூட்டலாகக் கொண்டு அனுப்பியருள அன்புடன் கேட்டுக் கொள்ளப்பெறுகின்றனர்.

மேலும், துணர் 58க்கும் தொடர்ந்து அனுப்பிட தமது இசைவினை நல்கி நலலாதரவுதர பொழில் அன்பர்களை அன்புடன்வேண்டிக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

ஆசிரியர்.

தமிழ்ப் பொழில்

பதிப்பாசிரியர் குழு

1. திரு. ச. இராமநாதன், அவர்கள்
   தலைவர், கரந்தைத் தமிழ்ச் சங்கம்.
2. திரு. கி. சந்திரமோகன், பி.ஏ., பி.எல்., அவர்கள்
   செயலாளர், கரந்தைத் தமிழ்ச் சங்கம்
3. திரு புலவர் க. வெள்ளைவாரணனார் அவர்கள்
   பேராசிரியர், தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்.
4. திரு. டாக்டர் சி. பாலசுப்பிரமணியன், எம்.ஏ., எம்.லிட்., பி.எச்.டி., அவர்கள்
   தமிழ்த் துறைத் தலைவர், சென்னைப் பல்கலைக்கழகம்.
5. திரு. டாக்டர் தமிழண்ணல், எம்.ஏ., பி.எச்.டி., அவர்கள்
   தமிழ்ப் பேராசிரியர், மதுரை காமராசர் பல்கலைக் கழகம்.
6. திரு. சிலம்பொலி சு. செல்லப்பன், எம்.ஏ., அவர்கள்
   தமிழ் வளர்ச்சித் துறை, இயக்குநர், சென்னை.
7. திரு புலவர் பி. விருத்தாசலம், எம்.ஏ., அவர்கள்
   முதல்வர், கரந்தைப் புலவர் கல்லூரி, தஞ்சாவூர்-2.
8. திரு. பேராசிரியர், புலவர் ச. பாலசுந்தரம் அவர்கள்
   367, மேல அரச வீதி, தஞ்சாவூர்.
9. திரு. புலவர் சி. கோவிந்தராசனார் அவர்கள்
   பேராசிரியர், மதுரை காமராசர் பல்கலைக் கழகம்.
10. திரு. புலவர் மீனா. இராமதாசு. எம்.ஏ., அவர்கள்
    உமாமகேசுவரா மேல் நிலைப்பள்ளி, தஞ்சாவூர்-2.

தமிழ்த்தாய் வாழ்க

கரந்தைத் தமிழ்ச் சங்கம்

தமிழ்ப் பொழிலின் கையொப்பம்

		உள் நாடு	வெளி நாடு
1.	ஆண்டு வரி	... 20—00	... 030—00
2.	தனி இதழ்	... 02—00	
3.	ஆயுள் வரி	... 250—00	... 250—00

—: சங்க உறுப்பினர்கள் :—

திங்கள் வரி	... 000—25
ஆண்டு வரி	... 003—00
ஆயுள் வரி	... 100—00

Regd No. TN/TJ/17.

தமிழ் வாழ்க

தமிழ்ப்பொழில்

கரந்தைத் தமிழ்ச்சங்கத் திங்கள் வெளியீடு

GOVT. OR. MSS. LIBRARY
MADRAS
Date of Accession 1.4.3.1985
Accession No.
Section Tamil
Ref. No. T4517

எண் :

திரு. .... அவர்கள்

கரந்தைத் தமிழ்ச் சங்கம்,
தஞ்சாவூர்-613 002.

விற்பனைக்குக் கிடைக்கும் நூல்கள்

நெல்லை வருக்கக் கோவை	0—12
சித்திராந்தாதி	0—12
சுருதி வீணை	0—25
கவியரசு நினைவுமலர்	1—00
சிவமும் செந்தமிழும்	0—25
Garland of Tamil Poetry	2—00
கச்சிக் கலம்பகம்—(பூண்டி அரங்கநாத முதலியார்)	0—50
தமிழரசி குறவஞ்சி	0—62
யாழ் நூல்—சுவாமி விபுலானந்தர்	50—00
கட்டுரைப்பொழில் (மணிவிழா மலர்)	30—00
மெய்ஞ்ஞானத்தின்—கொலுவிருக்கையில்	
அஞ்ஞானத்தின் வழக்கீடு (இரண்டாம் பதிப்பு)	2—00
—ந. மு. வேங்கடசாமி நாட்டார் (இரண்டாம் பதிப்பு)	3—00
" "	4—00
ளியீடுகள் :	
டித்தன் கவிதைகள்	6—00

Library

டுபவர் : திரு. ச. இராமநாதன், தலைவர், கரந்தைத் தமிழ்ச்சங்கம்,
கருந்திட்டைக்குடி, தஞ்சாவூர்-613 002.
அச்சிடுபவர் : திரு. M. சந்திரமௌலி,
ஜெமினி அச்சகம், 1837/1, மேல ராஜ வீதி, தஞ்சாவூர்-613 009.